விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 19 திங்கட்கிழமை (02.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# முன்பள்ளிகளிலும் இராணுவ ஆதிக்கம்

## மாணவர் சீருடையில் இராணுவச் சின்னம்!

(பனிக்கன்குளம்)

வன்னிப்பிரதேசங்களில் சிவில் பாதுகாப்பு படைப்பிரிவின் கண் காணிப்பிலுள்ள முன்பள்ளிகளில் கல்விகற்கும் மாணவர்கள் சி.எஸ்.டி இராணுவச் சின்னம் பொறிக்கப் பட்ட சீருடையை அணிந்து முன் பள்ளிகளில் கற்றல் நடவடிக்கை யில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கல்விகற்கும் மாண வர்களை இராணுவ படைப்பிரிவில் இணைக்க முயற்சிக்கும் முன்னகர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படு வதாக பெற்றோர் குற்றஞ்சாட்டி யுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)






## எனக்கு எதிராக ரணிலினால் என்னத்தை செய்ய முடியும்!

### மேதின கூட்டத்தில் மகிந்த பேச்சு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சில விடயங்களை முன்னிலைப் படுத்தி என் மீது வழக்கு தொடுக்கப் போவதாக தெரிவித்திருக்கின்றார் எதற்காக இதனை செய்கின்றார் என தெரிந்து கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் காணப்பட்ட கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்திய 23ஆம் பக்கம் பார்க்க....

## த.தே.கூ. மேதின கூட்டத்தில் பங்காளிக் கட்சிகள் இல்லை

### தமிழரசுக் கட்சி மட்டும் தனித்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மேதின கூட்டத்தில் கூட்டமைப் பின் பங்காளிக் கட்சிகள் எவையும் நேற்றையதினம் கலந்துகொள்ள வில்லை.

தமிழரசு கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் அங் கத்தவர்களே கலந்து கொண்டிருந்த நிலையில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய கட்சித்தலைவர்கள், பிரதிநிதிகள் எவரும் மேதின கூட் டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இணுவில் மருதனார்மடத்தில் நேற்றையதினம் மாலை கூட்ட மைப்பின் மேதின கூட்டம் நடை பெற்றது.

இக்கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்பாடு செய்துள்ள தாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் தமிழரசு கட்சி மாத்திரமே கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளது.

தமிழரசு கட்சியிலும் பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்துகொள்ளவில்லை. மாகாண சபை 23ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் 4 மேதின நிகழ்வுகள்









(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மேதின கூட்டம் நேற்றையதினம் யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் நடைபெற்றது. 24ஆம் பக்கம் பார்க்க....

## சி.ஐ.டி எனக் கூறிக்கொண்டு வீட்டினுள் நுழைந்து கொள்ளை

### 12 பவுண் தங்கநகை, பணம் பறிபோனது

(மல்லாகம்)

இராணுவ புலனாய்வுப் பிரிவு என்று கூறிக்கொண்டு வீட்டினுள் நுழைந்த ஐந்து பேர் கொண்ட ஆயுதக் குழு ஒன்றினால் பணம், நகைகள் என்பன கொள்ளையிடப் பட்டுள்ளன. சம்பவம் நேற்று அதி காலை 23ஆம் பக்கம் பார்க்க....

## பொருட்கள், சேவைகள் மீதான 15 வீத வற்வரி அதிகரிப்பு இன்று தொடக்கம் அமுலாகும்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் அதிகரிக் கப்பட்ட பொருட்கள், சேவைகள் மீதான பெறுமதி சேர் வரியான வற் வரி இன்று இரண்டாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடை முறைக்கு வருவதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் இதுவரைக் காலமும் 24ஆம் பக்கம் பார்க்க....

## இன்றைய தினம் விடுமுறை இல்லை

(கொழும்பு)

உலகத் தொழிலாளர்கள் தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமையில் அனுஷ்டிக்கப்பட்ட போதிலும் இன் றையதினம் அரசாங்க பொது விடு முறை தினமாகப் பிரகடனப்படுத் தப்படவில்லை என உள்நாட்டலு வல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரி வித்துள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழருக்கான தீர்வை பெறுவதற்கு பங்காளிகளின் ஒற்றுமை அவசியம்

### இரா.சம்பந்தன் மே தினத்தில் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள பங்காளி கட்சிகள் ஒற்றுமை யாக இருக்க வேண்டும் என வலி யுறுத்தியுள்ள தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், நல்லாட்சி அரசு தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்காவிட்டால் மீண்டும் சர்வதேசத்தின் அழுத்தத் திற்குள்ளாகும் எனவும் தெரிவித் துள்ளார்.

மேலும் முன்னைய அரசின் காலத்தில் தொடர்ந்த தமிழ்மக் களுக்கு எதிர்மாறான செயற்பாடு கள் தற்போதும் தொடர்வதாகவும் அவர் சாடியுள்ளார்.

நேற்றைய தினம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மே தின கூட்டத்தில் உரையாற்றிய 23ஆம் பக்கம் பார்க்க....

## 5-16 வயது வரை சிறுவர்கள் பாடசாலை செல்வது கட்டாயம்

### மீறும் பெற்றோருக்கு தண்டனை


(கொழும்பு)

நாட்டில் 5 வயதுக்கும், 16 வயதுக்கும் இடைப்பட்ட வயதுள்ள சிறுவர்கள் பாடசாலைக்குச் செல் வது கட்டாயமாக்கப்படவுள்ளது.

ஏற்கெனவே, 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பாடசாலைக்கு கட்டா யம் செல்ல வேண்டும் என்றிருந்த கட்டளை, தற்போது, 16 வயது வரை அதிகரிக்கப் 24ஆம் பக்கம் பார்க்க....

# நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு ஐ.தே.க அர்ப்பணிப்புடன் செயற்படும்

## பிரதமர் ரணில் மே தின உரை



(கொழும்பு)

நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு ஐ.தே.க கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பு கெம்பல் மைதானத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அர்ப்பணிப்புச் செய்த மக்களுக்கு நலன்களை வழங்கும் காலமே மலர்ந்து ள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ஒட்டுமொத்த பாராளுமன்றத்தையும் அரசாங்கமாக மாற்றியமைக்க முடியும் எனவும், அல்லது ஐக்கிய தேசியக் கட்சியை வளர்க்க நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் மக்களே இருக்கின்றார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ராஜபக்ஷ ஆட்சி கால குடும்ப அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி ஊழல் மோசடிகள் இல்லாதொழிக்கப்பட்டு நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கும் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள என அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கட்சிகளும் கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட்டாலும் நாட்டின் பொது விடயங்களில் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார். அதன் ஊடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்றுக் கருத்துடையவர்கள் இருக்கின்றார்கள் எனவும், அதற்கான ஜனநாயக அவகாசம் அனைவருக்கும் உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் சந்திகளில் நிற்கும் கார்ட் போர்ட் துட்டகைமுனுக்களுக்கு கட்சியில் இடமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் பில்லியன் களவாக கடன் பெற்றுக் கொண்டு அதன் சுமையை மக்கள் மீது திணித்து, உதயங்க வீரதுங்க போன்றவர்களுடன் கைகுலுக்கும் நபர்கள், நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு அஞ்சுவது நியாயமானதே என அவர் தெரிவித்துள்ளார்.

வற் வரி விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள போதிலும் உண்மையில் அத்தியாவசிய பொருட்களுக்கு வற் வரி விதிக்கப்படாது என அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# மக்களின் உரிமைகளை முடக்கும் அலரிமாளிகையை நாம் கைப்பற்றுவோம்

## அனுர குமார திஸாநாயக்க சூளுரை



(கொழும்பு)

மக்களின் உரிமைகளை முடக்கும் அலரி மாளிகையை கைப்பற்றுவோம் என ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு கொழும்பு பி.ஆர்.சீ மைதானத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

மக்களின் உரிமைகளை முடக்கும் அலரி மாளிகையை நாம் கைப்பற்றுவோம். ஜே.வி.பிக்கு அலரி மாளிகையில் அறை ஒதுக்கப்பட்டுள்ளதாக சிலர் கூறுகின்றார்கள்.

நாம் அறைகளை மட்டுமன்றி அலரி மாளிகையையே கைப்பற்றுவோம். நிச்சயமாக நாம் அலரி மாளிகையை கைப்பற்றுவோம்.

40 சமையல்காரர்கள் அலரி மாளிகையில் இருந்தார்கள், கிரிக்கட் போட்டிகளை கண்டுகளிக்க 200 அங்குல தொலைக்காட்சி, நாய்களுக்கும் ஏ.சீ. அறைகள், மினி மிருகக் காட்சிசாலை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் காணப்பட்டன.

மக்களின் வயிற்றில் அடித்தே இந்த சொகுசு வாழ்க்கையை சிலர் வாழ்ந்தார்கள். இதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்ட இடம் அலரி மாளிகையாகும்.

ஜே.வி.பி. எந்தக் காலத்திலும் அநீதிகளினால் பாதிக்கப்பட்ட மக்களுடனேயே இருக்கின்றது. அதனை நாம் செயற்பாடுகளின் மூலமும் உறுதி செய்துள்ளோம்.

கடந்த அரசாங்கத்தினதும் தற்போதைய அரசாங்கத்தினதும் நடவடிக்கைகளினால் மக்கள் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த அழுத்தங்கள் எங்கள் தலைமுறைகளுடன் நிறைவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (செ-12)

# கயிற்றில் தொங்கும் நாமல்



முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய மகிந்த ராஜபக்ஷவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷ, உடல் பயிற்சிகளில் ஈடுபடும் வீடியோ காட்சியை தனது சமூக வலைத்தளமான இன்ஸ்டகிராம் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.


குறித்த காணொளியில், அவர் ஒற்றை கயிற்றில் தொங்கி அதன் உச்சிவரை செல்வதும் மற்றும் கம்பியில் தொங்கியவாறு கால்களை உயர்த்தி அந்தரத்தில் தொங்கி பயிற்சியில் ஈடுபடுவதுமாக உள்ளது.

இந்த காணொளியை பார்வையி ட்டுள்ள பலர் சிறப்பான பதிவுகளை பதிவேற்றியுள்ளனர். (செ-12)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் இராமநாதன்

(ஓய்வுபெற்ற நில அளவையியலாளர்)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராமநாதன் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-விசாலாட்சி தம்பதிகளின் புதல்வனும் அமரர்களான நன்னித்தம்பி-கமலாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (பனை அபிவிருத்தி சபை), சுசீலா (யாழ்.பொது சன நூலகம்), ஐங்கரன் (வலி. கிழக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அமைப்பாளரும், வலி கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவரும்), கிருஸ்ணகுமார் (முரளி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரந்தரி, வாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவநாதன், ஜெகநாதன், யோகநாதன், உருக்குமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.05.2016 திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணி அளவில் சிறுப்பிட்டி தெற்கு காளையன் மொண்டி இந்து மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-இ.ஐங்கரன்
(அமைப்பாளர்-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலிகாமம், கிழக்கு)
0772203132

சிறுப்பிட்டி தெற்கு,
சிறுப்பிட்டி.

(4354)

# தசாக கிருஹயக்ஞ

## அழைப்பு







அன்புடையீர்!

நிகழும் துர்முகி வருடம் சித்திரைத் திங்கள் 10ஆம் நாள் (23.04.2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குலவிளக்கு யாழ்.வண்வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதமகுரு

**சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்**
**சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்**

அவர்களின்

தசாக சபிண்டீகரண ஆத்மார்த்த கிரியைகள் பின்வரும் தினங்களில் நீராவியடியில் நடைபெறும்.

| | |
|---|---|
| சித்திரை 19ம் நாள் 02.05.2016 | திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தசாகம் |
| சித்திரை 20ம் நாள் 03.05.2016 | செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இடபதானம், ஏகோதிஷ்டம், மாசியம். |
| சித்திரை 21ம் நாள் 04.05.2016 | புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சபிண்டீகரணம் |
| சித்திரை 22ம் நாள் 05.05.2016 | வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கிருஹயக்ஞம் |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையில் (மதிய போசனம்) கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


48, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:குடும்பத்தினர்.
தொ.பே:-0212221123

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(சி-4496)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதினக்கூட்டம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும் இணைந்து நடத்திய மேதினக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை சிவன்கோயில் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்ற போது ஈகச்சுடர் ஏற்றப்படுவதையும் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# காலி மேதின நிகழ்வுக்கு சென்றோர் மீது தாக்குதல்

(கொழும்பு)

காலியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டத்துக்கு ரயில்மூலம் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் குறித்த ரயில் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் போது ஒருவர் காயமடைந்துள்ளார். (இ-5)



மேதினக் கூட்டமும் வாழ்வாதார உதவி வழங்கலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடியில் நடைபெற்றபோது விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன், சிவன் பவுண்டேசன் நிறுவனத் தலைவர் வேகணேஷ்வரன் உள்ளிட்டோர் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.(இ-60)

## பிரதான அரசியல் கட்சியின்

# மேதினக்கூட்டத்தில் தமிழ் ஆதிவாசிகள்



இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக தமிழ் வேடுவர்கள் மற்றும் ஆதிவாசிகள் இலங்கையின் பிரதான அரசியல் கட்சி ஒன்றின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் வாழைச்சேனை புணாணை ரயில் நிலையத் தில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டுச் சென்று அதேவேளை கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு கிரான், மினிமிஹரின்தவளி, அக்கரானை, பிபிலை நீலகல் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த தமிழ் ஆதிவாசிகளே இந்த மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பாரம்பரிய தேன் எடுத்தல், வேட்டையாடுதல், மீன்பிடி தொழில்களில் ஈடுபட்டு வரும் தமிழ் பழங்குடியினர் முதல் முறையாக ரயிலில் பயணம் செய்ததாக தமிழ் வேடுவத் தலைவர் வைரமுத்து நடராஜா தெரிவித்துள்ளார். (இ-5)

## நேருக்குநேர் மோதிய மூன்று மோ.சைக்கிள்கள்

சிலாபம் ஹலாவத்த, மஹாவெவ நகரத்தில்மூன்று மோட்டார் சைக்கிள்கள் நேற்று முற்பகல் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் 2 பேர் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடு கொழும்பில் ஆர்ப்பாட்டம்




தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்கு மாறும், பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தொழிலாளர்களை தொடர்ந்து ஏமாற்றி கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தேசிய தமிழர் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், "1000 ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடு, தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்காதே, தொழிலாளர்களை அடகு வைக்காதே போன்ற வாசகங்கள் எழுதப் பட்ட பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (இ-5)

# பான வகைகளில் அடங்கியிருக்கும் சீனியின் அளவை லேபிள்களில் குறிப்பிடுதல் அவசியம்

(கொழும்பு)

சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற பான வகைகளில், அவற்றுள் அடங்கியிருக்கும் சீனியின் அளவை வர்ண லேபிள்களில் குறிப்பிடுதல் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

நீரிழிவு நோய்க்கு பிரதான காரணியாக சீனி அதிகமாக காணப்படும் பானங்கள் காணப்படுவதால் குறித்த நடவடிக்கையை சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவு மேற்கொண்டுள்ளது. (இ-5)

# உரிமை மீறும் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்படல் வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து







ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் உரிமை மீறும் செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் இணைந்து நேற்றைய தினம் மேதின ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தன. இந்த ஊர்வலம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து முற்பகல் 10 மணிக்கு குமாரசாமி வீதியூடாக பலாலி வீதியை அடைந்து பரமேஸ்வரா சந்தியூடாக மீண்டும்யாழ்.பல்கலைக்கழகத்தை வந்தடைந்து பின்னர் பல்கலைக்கழக முன்றலில் மேதினக்கூட்டம்இடம்பெற்றது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மேதினத்தில் எமது உறுதியான கோரிக்கையாக கல்விக்கு நூறுக்கு 6 வீதம் ஒதுக்க வேண்டும் என்பதுடன் கல்வியில் அரசியல் நியமனங்கள் நிறுத்த வேண்டும். அரச ஊழியர்களின் ஓய்வூதியத்தை அரசு நிறுத்த இருப்பதை கைவிட வேண்டும். விசேடமாக இலங்கை தேசிய பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வழங்க வேண்டும்.

வடமாகாண அரசு உட்பட அனைவரும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகளை மீறும் செயல்களில் தான் இறங்கியுள்ளனர். இதை தடுக்க வேண்டும்.

அத்துடன் தொடர்ச்சியாக கல்வியில் தான் மோசடி நடத்தப்படுகிறது. அதை தடுக்க வேண்டும். அதிபர் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள உயர்வுகள் முறையாக வழங்கவேண்டும் போன்ற அனைத்து விடயங்களையும் ஒருங்கிணைத்தே இந்த தொழிலாளர் தினத்தை மேற்கொண்டுள்ளோம்.

மேலும் மீனவர் பிரச்சினை,மலையக மக்கள் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை போன்றவற்றை வலியுறுத்தியுள்ளதோடு இவற்றை மிக அழுத்தமாக அரசுக்கு தெரிவித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தார்.


இதேவேளை யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் எஸ்.தங்கராசா கருத்து தெரிவிக்கையில்,

எமது உரிமைகள் பறிக்கப்பட்டதன் காரணமாக இன்றைய தினம் மேதின ஊர்வலத்தினை மேற்கொண்டுள்ளோம். எமது உரிமைகளை மீண்டும் பெறவேண்டும் என்றும் தொழிலாளர் சங்கம் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற காரணத்தினால் சில கோரிக்கைகள் முன்வைத்து ஊர்வலத்தை மேற்கொண்டோம்.

எமது கோரிக்கைகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். கைது செய்தல் இடைநிறுத்த வேண்டும். விவசாயிகள் தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதிக்க வேண்டும். மீனவர் தமது தொழிலை சுதந்திரமாக செய்ய வேண்டும், யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தின் இழிவான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். அரசியல் நியமனங்கள் நிறுத்தப்பட வேண்டும். இப்படியான மொத்த பிரச்சினைகளுக்கும் இன்று அனைத்து தொழிலாளர்களும்ஒன்றிணைந்து எதிர்ப்பை தெரிவித்து இந்தமேதினத்தின்ஊடாகசர்வதேசத்துக்கும் அரசாங்கத்துக்கும் தொழிலாளர்களை நசுக்காதே என்பதை அறிவுறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

### அக்ஷர் ஹட்ரிக் சாதனை

# தொடர் தோல்விகளுக்கு பின் மீண்டெழுந்தது பஞ்சாப்



அக்ஷர் படேல் ஹட்ரிக் சாதனை புரிய தொடர் வெற்றிகளை குவித்து வந்த ரெய்னாவின் குஜராத் அணியை பஞ்சாப் அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்தியாவில் ஒன்பதாவது ஐபிஎல் தொடர் நடக்கிறது.

இதன் 28ஆவது லீக் போட்டி நேற்று ராஜ்கோட்டில் நடந்தது. இதில் குஜராத்-பஞ்சாப் அணிகள் மோதின.

தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்த பஞ்சாப் அணியின் தலைமைப் பதவியிலிருந்து மில்லர் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக முரளி விஜய் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றார்.

நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணித் தலைவர் ரெய்னா முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**விஜய் அரைச் சதம்**

பஞ்சாப் அணிக்கு ஸ்டாய்னிஸ் 27 ஓட்டங்கள் எடுத்தார். கௌசிக் சுழலில் ஷோன் மார்ஷ் (1), மக்ஸ்வெல் (0) சிக்கினர். பொறுப்புடன் செயல்பட்ட அணித் தலைவர் முரளி விஜய் (55) அரை சதம் கடந்தார். மில்லர் 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டுவைன் பிராவோ பந்துவீச்சில் சகா (33), அக்சர் படேல் (0) வெளியேறினர். மற்றையவர்கள் ஏமாற்ற,

பஞ்சாப் அணி 19.5 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் குஜராத் அணி சார்பில் கௌசிக் 3, பிரவீண் குமார், பிராவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**அக்ஷர் அசத்தல்**

155 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

மோகித் சர்மா வேகத்தில் பிரண்டன் மக்கலம் (1), ரெய்னா (18) ஆட்டமிழந்தனர். டுவைன் ஸ்மித் 15 ஓட்டங்களில் திரும்பினார். இதன்பின் அக்ஷர் படேல் சுழலில் மிரட்டினார். இவர் வீசிய 7ஆவது ஓவரின் கடைசி இரண்டு பந்தில் தினேஷ் கார்த்திக் (2), டுவைன் பிராவோ (0) சிக்கினர். மீண்டும் 11ஆவது ஓவரை வீசிய அக்ஷர், முதல் பந்தில் ஜடேஜாவை (11) வெளியேற்றினார். இதன்மூலம் இத்தொடரில் முதல் முறையாக ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளரானார்.

இஷான் 27, போல்க்னர் 32 ஓட்டங்கள் எடுத்தனர். முடிவில் குஜராத் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்கள் மட்டும் எடுத்து வீழ்ந்தது.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பில் ஹட்ரிக் சாதனை புரிந்த அக்ஷர் 4 ஓவர்களில் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் மோகித் சர்மா 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக பஞ்சாப்பின் அக்ஷர் தெரிவானார்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

(யாழப்பாணம்)

சுதுமலை, அம்மன் கோயில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்ததாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், உடுவில் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் நாகையா செந்தூர்செல்வன் (வயது 44) எனப் பொலிஸார் கூறினர். நீர் இறைக்கும் இயந்திரத்தின் ஆழியினை போடும் போது திடீரென ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக இவர் மீது மின்சாரம் பாய்ந்துள்ள துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-12)

# கூட்டுறவாளர்களுக்கு இன்று விடுமுறை

இன்று திங்கட்கிழமை வடக்கு மாகாண கூட்டுறவாளர்களுக்கு விடுமுறை தினம் என வட மாகாண விவசாய மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்

நேற்றையதினம் கிளிநொச்சியில் நடைபெற்ற வடமாகாண கூட்டுறவாளர்களின் மேதின நிகழ்வில் சிறப்புரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

கூட்டுறவாளர்களின் மேதின நிகழ்வில் கூட்டுற வாளர்களால் தமக்கு 2ஆம் திகதி திங்கட்கிழமை விடுமுறை தருமாறு வட மாகாண விவசாய மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐங்கரநேசனிடம் வேண்டு கோள் விடுக்கப்பட்டதை அடுத்து அதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மேதின நிகழ் வில் இறுதியில் நாளை (இன்று) கூட்டுறவாளர்கள் அனைவருக்குமான விடுமுறை நாள் என அறிவிப்பை விடுத்தார்.(செ-312)

# மே தின ஊர்வலத்தில் ஒருவர் மீது தாக்குதல்


(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினியின் கணவன் ஐங்கரன் நேற்றைய தினம் நடைபெற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஊர்வலத்தின் போது தாக்கப்பட்டுள்ளார். பிறிதொரு அரசியல் கட்சியைத் சேர்ந்த நபர் ஒருவராலேயே இவர் தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மேதின ஊர்வலம் நேற்றைய தினம் மாலை நான்கு மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோவில் முன்பாக ஆரம்பித்து இராமநாதன் கல்லூரி வரை சென்றது. இவ்வாறு ஊர்வலம் இணுவில் வைத்தியசாலை அருகாமையில் கே.கே. எஸ்.வீதி வழியாக சென்று கொண்டு இருக்கும் போது குறித்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு முன்னர் தன்னை தாக்கிய நபர் தன்னை கொல்வேன் என மிரட்டியதாகவும் ஐங்கரன் தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல் சம்பவத்தினால் நேற்றைய தினம் ஊர்வலத்தில் சலசலப்பு ஏற்பட்ட தோடு, பொலிஸார் தாக்கிய நபரை பிடித்து சென்றனர். எனினும் இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படவில்லை என பொலிசார் தெரிவிக்கின்றனர். (செ-4)

# தந்தையின் நினைவாக ஜெர்சியில் நம்பர் 18ஐ பயன்படுத்தும் ஹோலி




விராட் ஹோலி தனது தந்தையின் நினைவாக ஜெர்சியில் நம்பர் 18ஐ பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் ஜெர்சியில் ஒரு நம்பர் எழுதப்பட்டிருக்கும். இதை தங்களது ராசி, ஏதாவது ஒரு நினைவாக அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

அதன்படி இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் விராட் ஹோலி தனது ஜெர்சியில் நம்பர் 18ஐ போட்டுள்ளமைக்கான காரணம் தற்போது தெரிய வந்துள்ளது.

அவர் தனது தந்தையின் நினைவாகவே அந்த நம்பரை பயன்படுத்தி வருகிறார்.

ஹோலிக்கு 18 வயது இருக்கும்போது அவரது தந்தை 2006ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி மரணமடைந்தார். இது ஹோலியை அதிகம் பாதித்தது. இதையடுத்து அண்டர்-19 போட்டிகளில் இருந்தே 18 என ஜெர்சி நம்பரை பயன்படுத்த தொடங்கினார்.

நான் இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்பதே தனது தந்தையின் கனவாக இருந்ததாக கூறும் ஹோலி, தற்போது அதை பார்க்க அவர் உயிருடன் இல்லை என்று அடிக்கடி கவலைப்படுவதாக தெரிவித்துள்ளார்.

### தல தோனிக்கு என்னாச்சு?

# தொடர் தோல்விகளைச் சந்திக்கும் புனே ரோகித்தின் அதிரடியால் மும்பை வெற்றி



தலை தோனிக்கு என்னாச்சு? அவர் தலைமையில் நடப்பு ஐபிஎல் தொடரில் அறிமுகத்தை மேற்கொண்டுள்ள புனே அணி தோல்வி மேல் தோல்விகளைச் சந்தித்து வருகிறது.

இதனால் புனே அணி லீக் சுற்றுடனேயே வெளியேறும் பரிதாப நிலையை அடைந்து விடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

9ஆவது ஐபிஎல் தொடரின் 29ஆவது லீக் போட்டியில் புனே- மும்பை அணிகள் நேற்று மோதின.

இப்போட்டியில் மும்பை அணி 9 பந்துகள் மிதமிருக்கையில் 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

**திவாரி அரைச் சதம்**

புனே அணிக்கு ரஹானே (4) ஏமாற்றினார். அதிரடியாக ஆடிய ஸ்ரீவ் ஸ்மித் 23 பந்தில் 45 ஓட்டங்கள் (3 சிக்சர், 4 பவுண்டரிகள்) எடுத்தார். ஹேண்ட்ஸ்கம்ப் (6) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய சௌரப் திவாரி (57) அரைச்சதம் கடந்தார். அணித் தலைவர் தோனி (24) சோபிக்கவில்லை.

புனே அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 159 ஓட்டங்கள் எடுத்தது. பெரேரா (12), பாட்யா (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்து வீச்சில் மும்பை சார்பில் பும்ரா 3 விக்கெட் வீழ்த்தினார்.

**ரோகித் அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு பார்த்திவ் படேல் (21) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். ரவிச்சந்திரன் அஷ்வின் சுழலில் அம்பதி ராயுடு (22) சிக்கினார். அபாரமாக ஆடிய அணித் தலைவர் ரோகித் சர்மா அரைசதம் கடந்தார். முருகன் அஷ்வின் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ரோகித் வெற்றியை உறுதி செய்தார்.

மும்பை அணி 18.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 161 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரோகித் (85 ஓட்., 60 பந்து, 3 சிக்சர்கள், 8 பவுண்டரிகள்), ஜோஸ் பட்லர் (27) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின்மூலம் 5ஆவது வெற்றியை பதிவு செய்த மும்பை அணி 10 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறியது. புனே அணி 6வது தோல்வியை பதிவு செய்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் தலைவர் ரோகித் சர்மா தெரிவானார்.



# வேட்கை

(யாழ்ப்பாணம்)

பன்னாட்டு பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுஷ்டிக்கப்படுகின்ற ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப் படுகொலை தின நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் மேன்மை விருந்தினராக நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அனுசரணை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இலங்கையில் ஊடக சுதந்திரம் எனும தலைப்பில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இயக்குநர் தே.தேவானந்த் உரையாற்றவுள்ளார். (செ-12)

# யாழ்ப்பாணம் சமூகவிரோதிகளின் கூடாரமாக இடமளிக்கக்கூடாது

## பொலிஸாருக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்தல்

(கொழும்பு)

**முப்பது வருட கால குண்டு வெடிப்புகளினால் அவலப்பட்ட யாழ்.குடாநாடு சமூகவிரோதச் செயற்பாட்டாளர்களின் கூடாரமாக அமைய இடமளிக்கக் கூடாது. யாழ்.குடாநாட்டை அச்சுறுத்தும் சமூகவிரோதிகள் அனைவரையும் கண்காணித்து, கைது செய்து நீதிமன்றங்களில் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கடந்த வெள்ளியன்று அறிவுறுத்தியுள்ளார்.**

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் சமூக விரோதச் செயற்பாடுகள் தலையெடுத்துள்ள சூழலில், யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜராகி இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக பொலிஸார் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தபோதே, மேல் நீதிமன்ற நீதிபதியினால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டை சமூக விரோதச்செயல்களற்ற பிரதேசமாகவும், குற்றச் செயல்களற்றதொரு பிராந்தியமாகவும் உருவாக்குவதற்காக பொலிஸாரின் ஊடாக நீதிமன்றங்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

ஆயினும் ஆங்காங்கே குற்றச் செயல்களும் சமூக விரோதச் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

திடீரென குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதற்கான காரணம் என்ன என வினவிய நீதிபதி அவற்றைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் வினவினார்.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தி பொதுமக்கள் அச்சமற்ற நிலையில் வாழ்க்கை நடத்துவதற்காக பொலிஸார் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள் என யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமூகவிரோதச் செயல்கள் அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ள சுன்னாகம், கோப்பாய், மல்லாகம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் விசேட பொலிஸ அணியொன்று சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைத் தேடி வலை விரித்துள்ளது. இங்கு செயற்படுகின்ற சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

கரையூர், பாஷையூர், அரியாலை பகுதிகளை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனது நேரடி கண்காணிப்பின்கீழ்கொண்டு வந்து, சமூக விரோதச் செயல்கள், குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்ட பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கைக்குண்டுகள், வாள்கள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அத்துடன், பொலிஸாரின் சைக்கிள் சுற்றுக்காவல், வாகனச் சுற்றுக்காவல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு சந்தேகத்திற்குரிய இடங்களில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுபவர்களைக் கண்காணித்து அவர்கள் மீது சம்பவ இடங்களிலேயே விசாரணை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சமூகத்தில் இடம் பெறுகின்ற களவு, கொள்ளைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக பொதுமக்கள் கையாள வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றார்கள்.

குறிப்பாக தமிழ் மக்களின் கலாசார பாரம்பரிய குடும்பச் சொத்தாகிய தங்க நகைகள், ஆபரணங்கள் என்பவற்றைப் பொதுவாக வீடுகளில் சாமி அறையிலோ அல்லது அனைவரும் சாதாரணமாகக் கையாள்கின்ற முறையிலான இடங்களிலோ வைக்காமல், கள்ளர்களும் கொள்ளையர்களும் கண்டு பிடிக்க முடியாத இடங்களில் பாதுகாத்து வைக்க வேண்டியது குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்த நீதிபதி இளஞ்செழியன் தங்க நகைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்குரிய சரியான வழிமுறைகளைப் பொதுமக்கள் கையாள வேண்டும்.

பொதுமக்கள் இந்த விடயத்தில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், கஷ்டங்கள் என்பவற்றைக் கேட்டறிந்து அவை குறித்து பொலிஸ் பொறுப்பதிகாரிகள் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

நீதிபதி இளஞ்செழியன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

களவெடுக்கப்பட்ட நகைகள், கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

அத்தகைய நகைகளை உடைமையில் வைத்திருப்பதுவும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அவ்வாறு பெறுகின்ற நகைகளை உருக்கி உருமாற்றம் செய்வதும் குற்றமாகும். இத்தகைய குற்றம் புரிபவர்களைத் தண்டிக்குமாறு சட்டம் பரிந்துரை செய்கின்றது.

எனவே, இத்தகைய நடவடிக்கைகளில் நகை வியாபாரிகளோ வங்கிகளோ ஈடுபடக் கூடாது.

தனியாரிடமிருந்து நகைகளை வாங்கும்பொழுது நகைகளை விற்பவர்கள், அல்லது அடைவு வைப்பவர்களின் தேசிய அடையாள அட்டை, முகவரி உள்ளிட்ட முழு விபரங்களையும் பதிவு செய்யும் நடைமுறையைக் கையாள வேண்டும்.

தங்க நகைக் கொள்ளைகள் அல்லது களவுகள் சம்பந்தமாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளும் நகை வியாபாரிகளும் வங்கி அதிகாரிகளும் இத்தகைய விபரங்களைப் பொலிஸாருக்கு வழங்கி ஒத்துழைக்க வேண்டும்.

சாவகச்சேரி நீதிமன்றத்தை உள்ளடக்கிய தென்மராட்சி, பருத்தித்துறை நீதிமன்றத்தை உள்ளடக்கிய வடமராட்சி, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தைக் கொண்ட ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களில் குற்றச் செயல்கள் குறைந்திருக்கின்றன.

இந்தப் பகுதிகளில் இருந்து பொலிஸாரை மேலதிகமாகப் பெற்று வாள்வெட்டு, குழுமோதல்கள், களவு கொள்ளைகள் இடம்பெற்று வருகின்ற மல்லாகம், சுன்னாகம், வட்டுக்கோட்டை, மானிப்பாய், கோப்பாய், அரியாலை, பாஷையூர், கரையூர் போன்ற பிரதேசங்களில் பணியில் அமர்த்தி குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முப்பது ஆண்டு கால குண்டு வெடிப்புக்களினால் அவலப்பட்ட யாழ் குடாநாட்டை சமூகவிரோதிகளின் கூடாராமாக்குவதற்கு இடமளிக்க முடியாது. பொது மக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள சமூக விரோதிகள் அனைவரையும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டம் தனது கடமையைச் செய்யும். சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் இரக்கம் காட்டமாட்டாது கடும் தண்டனை வழங்கும் என்றார் நீதிபதி இளஞ்செழியன்.(இ-5)

## இராசி பலன்

02.05.2016
(சித்திரை 19, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
தசமி பிற்பகல் 12.59 மணிவரை
சதயம் பிற்பகல் 3.58 மணிவரை
சுபநேரம் 11.57-1.27 மணிவரை
இராகுகாலம் 7.27-8.57 மணிவரை
திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி, சுக் புத | | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** – அந்நிய தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்லவேண்டிய நாள்.

**மேடம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**இடபம்** – இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** – பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கும்பம்** – மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கடகம்** – வழிபாட்டால் பெருமை காணவேண்டியநாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும்.

**மகரம்** – தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உங்களின் வார்த்தைகளைப் பலரும் கேட்டு நடப்பார்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்.

**சிம்மம்** – சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கனவு பலிதமுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு** – பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** – நிலையான வருமானத்திற்கு வழி செய்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேர கணபதியை வழிபடவேண்டிய நாள்.


**துலாம்** – எதிர்பார்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி** – செய்தொழிலை விருத்தி செய்ய எடுத்த முயற்சிகள் கைகூடும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், கௌரவமான நாள்.

# ஆட்டோ-மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது

நெல்லியடி சந்தியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் அந்தோனியார் சுருவம் உள்ள இடத்திற்கு தூக்கி எறியப்பட்டு பலத்த காயத்துடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் கரணவாய் பகுதியைச் சேர்ந்த 21 வயதேயான திலக்




ஷன் என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார் (இ-60)

# அரச புகைப்பட விருது வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

கலாசாரஅலுவல்கள்திணைக்களத்தின் ஏற்பாட்டில் அரச, புகைப்பட விருது வழங்கும் விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை புகைப்படக்கண்காட்சி நெளும் பொக்குண அரங்கு கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

அரச புகைப்பட விழாவினை சிறப்பிக்கும் வகையில் கலாசாரப் பிரிவினால் 5 பிரிவுகளாக புகைப்படப் போட்டி நடத்தப்படவுள்ளது. அவை முறையே,

1. வாழ்க்கை முறைகள் கலாசார அம்சங்கள்
2. இயற்கை வனவாழ்வு மற்றும் நிலக்காட்சிகள்
3. வெகுசன ஊடகம் மற்றும் செய்தி மற்றும் விளையாட்டு
4. பெருவிழாசந்தர்ப்பங்கள்
5. மேற்படித் தலைப்புக்களை உள்ளடக்கிய வகையில் திறந்த பிரிவு

ஒரு பிரிவில் ஒருவர் 4 புகைப்படங்களை அனுப்ப முடியும். விண்ணப்பதாரர் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு அருகாமையிலுள்ள பிரதேச சபை செயலகத்திடம் அல்லது மாவட்டச் செயலகத்திடம் புகைப்படங்கள் கிடைக்கக்கூடிய வகையில் கலாசார அலுவலருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும். புகைப்படத்தின் நீளம் மற்றும் அகலம் 10×15 இற்கு குறையாமலும் 12×18 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

முதலாம் இடத்துக்கு 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் இடத்துக்கு 10 ஆயிரம் ரூபாவும் மேற்படி தலா ஒவ்வொரு பிரிவிற்கும் 10 சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக் ளத்தால் நாட்டிலுள்ள சகல பிரதேச செயலக கலாசாரப் பிரிவுகளுக்கும் அறிவித்தல்வழங்கப்பட்டுள்ளது. (இ-51)

# கலாசாரக் கண்காட்சி

கலாசார மற்றும் கலையலுவல்கள்ஊக்குவிப்புவேலைத்திட்டத்திற்கு அமைவாக எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் சுதேசிய உணவு மற்றும் கலாசார கண்காட்சி நடைபெறவுள்ளது.

பாரம்பரிய உணவுகள், பொதியிடப்பட்ட சிற்றுண்டிகள், பனை மற்றும் தென்னை உற்பத்திப் பொருட்கள், சிறு தொழில் உற்பத்திப் பொருட்கள், பலகாரங்கள், கலாசார மரபுரிமைப் பொருட்கள், கைப்பணிப் பொருட்கள், வாத்தியக் கருவிகள், புராதன சின்னங்கள், பாரம்பரிய ஆடைகள், பாரம்பரிய விளையாட்டுக் கருவிகள், கலைப்பொருட்கள் முதலான உற்பத்திப் பொருட்கள் மற்றும் கலாசார சாதனங்களை உற்பத்தி செய்வோர்/வைத்திருப்போர் யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பொருட்களைக் காட்சிப்படுத்தி ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு யாழ். பிரதேச செயலக கலாசார அதிகார சபைத் தலைவரும் பிரதேச செயலாளருமான பொ.தயானந்தன் அறிவித்துள்ளார். (இ

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறும்.

தினமும் மாலை 5 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி அம்பிகை வீதியுலா வரும் காட்சியும் தொடர்ந்து 16 ஆம் நள் வியாழக்கிழமை (19.05.2016) காலை 5.30 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்துமாலைதிருவூஞ்சல்பாடப்பெற்று அம்பிகை வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (இ

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினம்

(இருபாலை)

யாழ். நீர்வேலி சி.சி. தமிழ்க்கலவன் பாடசாலை இந்து மாமன்றத்தினர் திருநாவுக்கரசுநாயனார்குருபூசைவிழாவை இன்று 2 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடத்தவுள்ளனர். இந்நிகழ்வு வித்தியாலய முதல்வர் இரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில்வித்தியாலய மாணவர்களின் ஆன்மீக நிகழ்வுகளும் ஆசிரியை திருமதி தர்மறஞ்சினி நாகராஜனின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறும். (இ-136)

# கலைஞர்கள் சங்கம் நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இசைக்குழுக்கள் ஒன்றிணைந்து இசைக்குழுக்களின் கலைஞர்கள் சங்கம் ஒன்றை அமைப்பதற்கான நிர்வாக தெரிவு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் இடம்பெற்றது.

இதில் தலைவர் என்.டிகே. சுமணன் (ராக்ம்ஸ் இசைக்குழு), உபதலைவர் வி.பானுதீபன் (சாரங்கா இசைக்குழு), செயலாளர் ஜேம்ஸ் அன்ரன் (ப்ரன்ஸ் இசைக்குழு), உப செயலாளர் ரி. பிரசாத் (சுருதிலயா இசைக்குழு), பொருளாளர் ஆர்.இராஜேஸ்வரன் (அருணா இசைக்குழு), கணக்காய்வாளர் ரி.துவாரகன் (வானவில் இசைக்குழு) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இத்தோடு இன்னும் சில நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-78)

# யோகாசன வகுப்புக்களின் புதிய பிரிவுகள் 7 ஆம் திகதி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் ஆலயத்தின் முன்புறம் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகாசன வகுப்புக்களின் புதிய பிரிவுகள் எதிர்வரும் 07 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. வகுப்புக்கள் நடைபெறும் விபரம்,

ஆண்கள் பிரிவு I (சனி, ஞாயிறு காலை 6-7)

ஆண்கள் பிரிவு II (சனி, ஞாயிறு காலை 7-8)

பெண்கள் பிரிவு (சனி, ஞாயிறு காலை 8-9)

மூன்று மாதகால யோகாசன கற்கை நெறியை பூரணமாக பூர்த்தி செய்பவர்களுக்குதிணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

நோயாளர்களுக்கு விசேட கவனம் எடுத்து பயிற்றுவிக்கப்படும்.

மேலும் இங்கு மிருதங்கம், வயலின், பண்ணிசை மற்றும் சங்கீத வகுப்புகளும் இலவசமாக நடைபெற்று வருகின்றன.

மேலதிக விபரங்களுக்கு 021 321 5393 என்ற இலக்கத்தோடு அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா:56செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/4310 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 28செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/5188 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 16செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MSC/லண்டன் PR<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4313 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 15சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5191 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 49சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்BScலண்டன் NOTPR<br>தொ.இ: B/4315 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 21செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் : QS/தனியார் தொழில்<br>தொ.இ: G/5194 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 81சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4319 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 44செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BFA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5196 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.




எலபட்டிய ரததன ஸ்ரீ றோயல கலலூரி அதிபா, ஆசிரியா, மாணவாகள் என 75 போ புதுவருடததினை முனனட்டு அமபன அ.மி.த.க பாடசாலைககு கடநத 28 ஆம திகதி வருகை தநதனா. அவாகளை பாடசாலை அதிபா, ஆசிரியா, மாணவாகள அழைதது வருவதையும இரணடு பாடசாலை மாணவாகளும இணைநது விளையாட்டில ஈடுபடுவதையும படஙகளில காணலாம். (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் விபத்து

## ஒருவர் படுகாயம்

யாழ்.கரவெட்டி யாக்கருப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆட்டோ ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

முற்பகல் 10.30 மணிய வில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த இராசலிங்கம் தினேஸ் (வயது- 30) என்பவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-60)

# புகையிரத சேவை திணைக்களத்திற்கு 2015ம் ஆண்டில் ரூ.770 கோடி நட்டம்

(கொழும்பு)

இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்களத்துக்கு கடந்த ஆண்டில் மட்டும் ரூபா 770 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கை யொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

மத்திய வங்கியின் பொருளாதார அறிக்கையில் புகையிரத சேவைகள் திணைக்களம் குறித்து வெளியிடப்பட்டுள்ள தகவலில் இந்த விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டில் புகையிரத சேவைகள் திணைக்களம் 1100 கோடி ரூபா நட்டத்தை எதிர் கொண்டிருந்தது. இந்நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டில் 770 கோடி ரூபா வாக நட்டத்தின் அளவைக் குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது.

எனினும் பொருளாதார இழப்புகள் மற்றும் நட்டங்களிலிருந்து விடுபட்டு, இலாப மீட்டும் நிறுவனமாக புகையிரத சேவைகள் திணைக்களத்தை மாற்றுவதற்கு பாரிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் 2014 ஆம் ஆண்டில் மட்டும் புகையிரத சேவைகள் திணைக்களத்தின் தேவைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 500 கோடி ரூபாவுக்கு மேல் நிலுவைத்தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.

இதன் காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நட்டத்தை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் பொன்னம்மா



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா கடந்த 30.04.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியை கள் இன்று 02.05.2016 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகள் திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பண்ணாகம்**
**077 539 1425**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(4348)

# காலியில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி!

(கொழும்பு)

காலி, நெளுவா, வாடிமுல்ல பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

29 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். (இ-5)

# மாகாண சமூக சேவைகள் திணைக்களம்- வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

### கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளல்- 2016/17

1.வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2.விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாகஇருத்தல் வேண்டும்.

3.யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்திற்கு குறையாதமுன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்வேண்டும்.

5.பொருத்தமான கேள்விவைப்பு பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6.தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத்திணைக் களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா. 1,000 காசாக செலுத்தி தமிழ்மற்றும் ஆங்கிலமொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலகநாட்களில் 02.05.2016 தொடக்கம் 19.05.2016 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

7."Cleaning Service -2016/17, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Cle.Ser/2016 -17" என்ற விபரம் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.விலைக்கேள்விகள் 23.05.2016 ஆம்திகதி 14:00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 23.05.2016ஆம் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்

9.விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.

10.கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துசெய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**ந. இன்பராஜ்,**
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
மாகாண சமூகசேவைகள் திணைக்களம், வ.மா
கண்டிவீதி, கைதடி

(சி-4490)

# மரண அறிவித்தல்

## திருமதி ராஜராஜேஸ்வரி கோதண்டபாணி

**தோற்றம்:-22.07.1927**
**மறைவு:- 28.04.2016**



மூளாயைப் பிறப்பிடமாகவும் யாழ்.கோண்டாவில் காளிகோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜராஜேஸ்வரி கோதண்டபாணி கடந்த 28.04.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வீரலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஷ்வலிங்கம்- அன்னம் தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் கோதண்டபாணியின் அன்பு மனைவியும் V.K.கானமூர்த்தி, V.K. பஞ்சமூர்த்தி,V.K.விஜயமூர்த்தி, ஆனந்தவல்லி ஆகியோரின் தாயாரும் அமரர்கள் வலங்கைமான், சண்முகசுந்தரம் (இந்தியா), சந்தானகிருஷ்ணன், பாலகிருஷ்ணன், முத்துகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன், தையல்நாயகி, முத்துலட்சுமி, ராசாம்பாள், பஞ்சநாயகி, சுந்தராம்பாள், தனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணாம்பாள், ஸ்ரீரஞ்சினி, சரஸ்வதி, கமலாதேவி, தர்மலிங்கம், மாசிலாமணி, குழந்தைவேலு, நடராசசுந்தரம், முருகானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகலட்சுமி, ஜெயராணி, ராஜேஸ்வரி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் மாமியும் மோகனாங்கி, கண்ணதாசன், சந்திரசேகர், கிருஷ்ணதாசன்,காயத்திரி, சாருமதி,வசந்தா, சுதர்சா, சசிரேகா, குமரேஸ், விஜயலட்சுமி, பவதாரணி, பவசர்மினி, ராமதாஸ், தேவதாஸ், விஜயசிறி, கோபிதாஸ், கிருபாகரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.05.2016 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோவிலடி, ஸ்ரேசன் வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

(சி-4493)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 222 5768**

# 31 ஆம் நாள் நினைவலைகள்




எழுதுமட்டுவாழ் உப
அஞ்சலக ஊழியர்
ம.சண்முகராசா அவர்களின்
தந்தையார்
**ச.மயில்வாகனம்** அவர்களின்
அந்தியேட்டி
02.05.2016 இல்
இடம்பெறுவதால்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

(சி-4491)

**உப அஞ்சலதிபர், ஊழியர்கள், எழுதுமட்டுவாழ்.**

# மலசலகூட குழியை சுத்திகரிக்கையில் மீட்கப்பட்ட வெடி பொருட்களின் விபரம்

(பரந்தன்)

கிளிநொச்சி பரந்தன் ஏ-35 வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த 29 ஆம் திகதி மலசலகூடத்தினை சுத்திகரிக்கையில் மலசலகூட கிடங்கில் ஒருதொகுதி வெடி பொருட்கள் இருப்பதனை அவதானித்த வீட்டு உரிமையாளர் அருகில் இருந்த இராணுவத்தின் 57 ஏழாவது படைப்பிரிவு முகாமிற்கு தகவல் வழுங்கப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு வருகை தந்த இராணுவ வெடி பொருட்கள் செயலிழக்கும் பிரிவினர் மீட்புப் பணியை ஆரம்பித்திருந்தனர்.

கடந்த 29 ஆம் திகதி முற்பகலில் இருந்து மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் வரை நடத்தப்பட்ட மீட்பு பணியில் ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.



குறித்த மலசலகூட கிடங்கில் இருந்து 40MM டோம்பா வகை குண்டுகள் ,43 RPG வகை குண்டு ஒன்று , டிகர் வகை காஸ் 10, 81MM மோட்டர் ஷெல் 5, 82 MM மோட்டர் ஷெல் 20,80 MM மோட்டர் ஷெல் 35, T56 வகை துப்பாக்கி மகசீன் 10,போக்கி ரோக்கி ஒன்று, MPMG வகை பற்றி02,MPMG வகை ஷெல் 20,MPMG வகை பிற்போற 04, AGAS கைக்குண்டுகள் 03, 82-2 வகை கைக்குண்டு ஒன்று , T56 வகை துப்பாக்கி ரவைகள் 90, 66MM AGAS வகை குண்டுகள் 10 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவற்றின் தன்மை செயலிழக்காமல் இருந்தாலும் இவற்றை மீண்டும் பாவிக்க முடியாத நிலை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடத்தில் பல இடங்களில் வெடி பொருட்கள் மீட்கப்பட்ட போதும் பரந்தன் பகுதியில் மீட்கப்பட்ட வெடி பொருட்களே அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-312)




# ஆட்டோ வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் சாரதி படுகாயம்



(பரந்தன்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் சாரதி படுகாயம் அடைந்த நிலையில் பூநகரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதன்போது ஆட்டோவின் முன் பகுதி பலத்த சேதத்திற்குள்ளானது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 4.45 மணியளவில் பரந்தன் - பூநகரி வீதியில் 8 ஆவது மைல்கல் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பூநகரியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோ திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது சாரதி படுகாயம் அடைந்த நிலையில் உடனடியாக மீட்டெடுக்கப்பட்டு மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (2)

# போதைப்பொருள் பாவனையால் இளைய சமுதாயம் சீர்குலைகின்றது

## கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறக்கூடியதான குற்றங்களைத்தடுப்பதற்கு மதத்தலைவர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும் என கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாரித ஸ்ரீவரதன தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் மதத்தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையல், போதைப்பொருள் பாவனை தற் போது அதிகரித்துக் காணப்படுவது டன், இவ்வாறான போதைப் பொருள் பாவனையால் இளைய சமுதாயம் சீர்குலைகின்றது. அத்துடன், சிறுவர்களின் தொலைபேசி பாவனைகள் காரணமாக பாரிய துஷ்பிரயோகங்கள், குற்றங்கள் நிகழ்கின்றன. பெற்றோர்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வுகள் மிக அவசியமாகின்றது. அண்மை நாட்களில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 17 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளை கள் பாதிப்புக்குள்ளாகிய முறைப்பாடுகளே அதிகமாக காணப்படுகின்றன. ஆலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் மதத்தலங்களில் வழிபாடுகள் இடம்பெறுகின்றபோது இது தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்களை வழிபடு வோருக்கு வழங்குவதன் மூலம இவற்றை தடுக்க முடியும் என்றார்.(2)

# நீதிமன்ற அபராதங்கள்

## கஞ்சாவுடன் கைதான இருவருக்கு 13ம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி, இரணைமடுச்சந்தி பகுதியில் இரண்டு கிலோகிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவரின் விளக்கமறியலையும் எதிர்வரும் 13ஆம் திகதிவரை நீடித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா கடந்த 29 ஆம் திகதி உத்தரவிட்டார்.

கிளிநொச்சிப் பொலிஸாரால் கிளிநொச்சி இரணைமடுச் சந்திப்பகுதியில் கடந்த மாதம் இரண்டு கிலோகிராம் கஞ்சாவுடன் ஆட்டோ உரிமையாளர் உட்பட்ட இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த குற்றச்சாட்டின் இரண்டாவது சந்தேக நபர் பிணை விண்ணப்பத்தை சட்டத்தரணியூடாக சமர்ப்பித்தபோது, அதனை நீதவான் நிராகரித்ததுடன், கஞ்சா பாவனையினால் இளம் சமூகம் சீரழிக்கப்படுகின்றது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் இவ்வாறான செயற்பாடுகளால் சீரழிக்கப்படுகின்றனர்.

இவற்றுக்கு துணையாக இருப்பவர்களுக்கு பிணை வழங்க முடியாது என்றும் இவ்வாறான செயற்பாடுகளில் யார் ஈடுபட்டாலும் அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந் நிலையில் கடந்த 29 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இருவருக்கும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நீடித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.(2)

## தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டவருக்கு தண்டப்பணம்

### வலைகளை அழிக்குமாறும் உத்தரவு

கிளிநொச்சி, பூநகரி கடற்பகுதியில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மூவருக்கு தலா ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து, கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உத்தர விட்டார்.அத்துடன், கைப்பறறப்பட்ட வலைகளை அழிக்குமாறும் உத்தர விட்டார்.

கிளிநொச்சி, பூநகரி கடற்பகுதியில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மூவரை கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்து அவர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்தனர்.

கடந்த 29 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் இவ்வாறு உத்தரவிட்டார். (2)

# இயற்கை ஒதுக்கிடங்கள் என்ற பெயரில் வடக்கில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் குற்றச்சாட்டு



(மன்னார்)

வடக்கில் இராணுவத்துக்கென்று ஒருபுறம் காணிகள் அபகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அதேசமயம், இன்னொருபுறம் இயற்கை ஒதுக்கிடங்கள் என்ற பெயராலும் காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளளார்.

மன்னார் உயிலங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கடந்த 29 ஆம் திகதி விவசாயிகளுக்கான நடுகைப் பொருட்கள் மற்றும் கால்நடைகள் வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மன்னார் மாவட்டத்தில் விளையும் விளாம்பழங்கள் தனித்துவமான சுவையுடையவை. இதனால், மன்னாரில் வெற்றுக்காணிகளில் பெரிய அளவில் விளாமரத் தோப்புகளை உருவாக்க வேண்டும் என்று விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் நான் சொல்லியிருந்தேன்.

அதன் அடிப்படையில் அவர்கள் ஏழாயிரம் விளாமரக் கன்றுகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால், அவற்றை நடுகை செய்வதற்கு நாங்கள் இப்பொழுது காணிகளைத் தேடவேண்டியிருக்கிறது.

மன்னாரில் வன ஜீவராசிகள் திணைக்களம் தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 29,180 ஹெக்டயர் பரப்பளவை விடத்தல்தீவு இயற்கை ஒதுக்கிடம் என வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளது. இது சூழலியல் முகமூடி அணிந்து கொண்டு மேற்கொள்ளப்படும் ஒரு நில அபகரிப்பு.

தேசியப் பூங்காக்களுக்கும் இயற்கை ஒதுக்கிடங்களுக்கும் வேறுபாடுகள் உண்டு. தேசியப் பூங்காவினுள் நுழைய பொது மக்களுக்கு அனுமதி உண்டு.

அதேபோன்று, சரணாலயங்களுக்குள் நுழைவதற்கும் பொது மக்களுக்கு அனுமதி உண்டு. ஆனால் இயற்கை ஒதுக்கிடங்களுக்குள் நுழைவதற்கு அனுமதி இல்லை. இதனால், இவ்வாறு இயற்கை ஒதுக்கிடங்கள் என்று ஒதுக்கப்படும் இடங்களுக்குள் நாங்கள் எதனையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நாகர்கோவில் இயற்கை ஒதுக்கிடம் என்ற பெயரில் 7ஆயிரத்து 882 ஹெக்டயர் காணி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பொதுமக்களின் வயல் நிலங்கள், தென்னந்தோப்புகள், குடியிருப்புகள் என்பன உள்ளடங்கியுள்ளன. பொதுமக்கள் தங்கள் எதிர்பார்ப்பை வெளிக்காட்டியதன் பின்னர், வன ஜீவராசிகள் அமைச்சு இது தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய இப்போது இணங்கியிருக்கிறது. இது போன்ற விழிப்புணர்வு மன்னாரிலும் ஏற்பட வேண்டும். பறவைகள், விலங்குகள் பாதுகாக் கப்பட வேண்டும். பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள். (2)

# பல்கலைக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு


மு/முள்ளியவளை வித்தி யானந்தா கல்லூரியில் கடந்த வருடம் நடைபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சை யில் சித்தியடைந்து பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய் யப்பட் 90 மாணவர்கள் கடந்த 27 ஆம் திகதி கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத் தினால் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வு கல்லூரி அதி பர் ந.சிவலிங்கம் தலைமை யில் பிற்பகல் 2 மணியள வில் நடைபெற்றது.

இதில் கல்லூரியின் பழைய மாணவனும் ஆபிரிக்க நாட் டின் ஐ.நா.தலைமை அதிகாரி யுமான வி.நவநீதன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக் கது. (2-310)
















வடக்கு மாகாண கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண கூட்டுறவு மே தினப்பேரணி நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமானது. பேரணியானது கிளிநொச்சி கரடிபோக்குச்சந்தியில் இருந்து ஆரம்பமாகி ஏ-9 வீதி வழியாக நகர்ந்து கூட்டுறவுச் சபை மண்டபத்தை சென்றடைந்தது.

(படங்கள்: மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

## ‘காணாமல் போனோருக்கு பதில் கூறு; அனல் மின்நிலையம் நாசம், நாசம்’

### புதிய மாக்சிச லெனின் கட்சி மே தினக் கூட்டத்தில் கோஷம்

புதிய மாக்சிச லெனின் கட்சியின் மே தின ஊர்வலம் நேற்றுக்காலை வவுனியாவில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வீ.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

புதிய மாக்கிச லெனின் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பேரணியில் தமிழ் தேசிய இளைஞர் கழகம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வவுனியா காணாமல் போனோர் சங்கம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு உள்ளிட்ட பொது அமைப்புக்கள் பலவும் தமது ஆதரவை வழங்கியிருந்தன.

வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முன்பாக ஆரம்பித்த பேரணியானது நகர வீதிவழியாக வந்து நகரசபை கலாசார மண்டபத்தை சென்றடைந்து பொதுக் கூட்டமும் இடம் பெற்றது.

பேரணியில் ஈடுபட்டோர் “ மைத்திரி - ரணில் அரசே தேர்தல் வாக்குறுதிகள் என்னாச்சு பொருட்களின் விலைகள் குறைந்தனவா, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமற் போனோருக்கு பதில் கூறு, அனல்மின் நிலையம் நாசம் நாசம்,சம்பூர் மக்களின் வாழ்வுக்கு நாசம், சம்பந்தன் ஐயாவே சம்பூருக்கு பதிலென்ன, மாவை அண்ணாச்சி சுன்னாக நீருக்கு தீர் வென்ன, வாக்கு வாங்க கூட்டமைப்பு பிரச்சினைக்கு யார் பொறுப்பு, எட்கா ஒப்பந்தம் எமக்கு வேண்டாம்” என பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பேரணியில் ஈடுபட்டனர்.

இதன் போது தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் இந்தியா, அமெரிக்காவின் பிடிக்குள் இலங்கை என்பவற்றை சித்தரிக்கும் ஊர்திகளும் வலம் வந்தன.

இதில்புதிய மாக்சிச லெனின் கட்சியின் தலைவர் செந்தில் வேல், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபையின் முன்னாள் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250)




## உயிலங்குளம் கமநலசேவைகள் நிலைய கட்டடத்தை காலம் தாழ்த்தாது புனரமையுங்கள்

### விவசாயிகள் கோரிக்கை



மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள உயிலங்குளம் கமநல சேவைகள் நிலையம், இற்றைவரை புனரமைக்கப்படாமல் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டு நீண்டகால மாகியும்,இற்றைவரை புனரமைக்கப்படாமையினால் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடப்பெயர்ந்த பின்னர், குறித்த கமநல சேவைகள் நிலையம் கைவிடப்பட்டிருந்த நிலையில், கடந்த 1993 ஆம்ஆண்டு பொலிஸார் கையகப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் 2002 ஆம் ஆண்டு பொலிஸார் அப்பகுதியிலிருந்து விலகிய நிலையில், 2003 ஆம்ஆண்டு முதல்மீண்டும் கமநல சேவைகள் நிலையமாக இயங்கி வருகின்றது.

கடந்த காலங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குறித்த கட்டடம்சேதமடைந்துள்ளதுடன், பாழடைந்து சுவர்களில் பாரிய வெடிப்புகளும்உருவாகி கட்டடம் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. இதனால் அங்கு பணியாற்றும் அரச ஊழியர்கள் மற்றும் தேவை கருதி வரும் விவசாயிகள் அச்சத்தில் உள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் 17 விவசாய அமைப்புக்கள் இருக்கின்ற நிலையில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விவசாயிகளுக்கென விவசாய நிலங்களாக பதிவிலுள்ளதுடன், இதன்மூலம் 7 ஆயிரம் விவசாயிகள் பயனடைகின்றனர். எனினும் பலவருடங்கள் கடந்த நிலையிலும் குறித்த கமநல சேவைகள் நிலையம் புனரமைக்கப்படாமையினால் விவசாயிகள் தொடர்ந்தும் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கட்டட சுவர்களில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் கட்டடம் இடிந்து விழக்கூடிய நிலையேற்பட்டுள்ளது. இங்கு பணிபுரியும்7பணியாளர்களும்தேவை கருதி இங்கு வரும் விவசாயிகளும் கட்டடத்தை மேலேயும் கீழேயும் பார்த்தவண்ணம் பீதியில் தங்கள் வேலைகளைச் செய்து வருகின்றனர். இது தொடர்பில் அதிகாரிகளின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு சென்றிருந்த போதிலும் கமநல சேவைகள் நிலையத்தை புனரமைப்பதில் இன்று வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த கட்டடத்தை விரைவில் புனரமைத்து விவசாயிகள் பயனடையக்கூடிய விதத்தில் அமைத்துத்தருமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (2-281)

## அம்பலப்பெருமாள் கிராமத்தில் இடர்முகாமைத்துவக்குழு தெரிவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் இடர் முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவிலுள்ள அம்பலப் பெருமாள் குளம் கிராமத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவினரால் இடர்முகாமைத்துவக்குழு கடந்த வாரம்தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர்களான பி.சுந்தர், பி.சயந்தன், துணுக்காய் பிரதேச செயலகத்தின் இடர் நிவாரண உத்தியோகத்தர் சி.சிவரஞ்சினி, அம்பலப் பெருமாள் குளம் கிராம அலுவலர் எஸ். நாகபாதம் ஆகியோர் கலந்து கொண்டு இடர் முகாமைத்துவக்குழுவை தெரிவுசெய்தனர்.

கிராம அலுவலரை தலைவராகக் கொண்டு இக்குழு இயங்கும் என முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் பி.சுந்தர்,

“இடர்கள் ஏற்படுகின்ற போது எல்லோரும் இணைந்து செயற்பட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும். அதனடிப்படையிலே மாவட்டத்தின் அனைத்துக் கிராம அலுவலர் பிரிவிலும் இடர் முகாமைத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலேயே கூடுதலான இடர்முகாமைத்துவக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது” என தெரிவித்தார்.

அம்பலப் பெருமாள் குள கிராமத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் 100 குடும்பங்கள் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## மாணவர்களுக்கு சித்திரம், சைவ அறிவுப் பரீட்சை

வவுனியா ஆரோக்கியா பல்வைத்தியசாலையின் அனுசரணையில் இந்து அறநெறிப் பாடசாலைப் பேரவையின் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சித்திரம் மற்றும் சைவ அறிவுப் பரீட்சை ஆகியவற்றை எதிர்வரும் 8 ஆம் திகதி வவுனியா வைரவப் புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் காலை 10.30மணிக்குநடத்தவுள்ளது. எனவே இப் போட்டிக்கு அறநெறிப்பாடசாலைமாணவர்களை கலந்து கொண்டு பயன் பெறுமாறு பேரவைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.(2)

# இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை-2016 மாதிரி வினாத்தாள் நுண்ணறிவும் பொது அறிவும் SLEAS, SLAS

*(29/04 வலம்புரி பக்கம் 10 இன் தொடர்ச்சி)*

- **37 தொடக்கம் 45 வரை சரியான விடையைத் தெரிவு செய்க.**

37.




1. 22 2. 35 3. 42 4. 104

38.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 25 | | 3 | 2 | 19 | | 4 | 4 | 37 |
| 1 | 4 | 23 | | 1 | 5 | 31 | | 1 | 3 | ? |


1. 15 2. 18 3. 31 4. 44

39.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | | 10 | 7 | | 5 | 6 | | 6 | 3 |
| 58 | 28 | | 93 | 39 | | 19 | 31 | | 33 | ? |


1. 8 2. 36 3. 3 4. 9

40.





1. 65 2. 45 3. 55 4. 18

41.




1. 72 2. 42 3. 12 4. 48

42.




1. 14 2. 45 3. 18 4. 10

43.

| | | |
|---|---|---|
| 8 | 40 | 13 |
| 7 | 14 | 9 |
| 10 | 40 | 14 |
| 5 | ..... | 12 |


1. 25 2. 7 3. 41 4. 35

44.

| | | |
|---|---|---|
| 4 | 23 | 5 |
| 8 | 45 | 7 |
| 2 | 24 | 5 |
| 6 | ..... | 9 |

1. 73 2. 58 3. 78 4. 81

45.




1. 41 2. 52 3. 46 4. 35

**சரியான விடையைத் தெரிவு செய்க**

46. இலங்கையில் அதிகுறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டமைந்த மாவட்டம்
1.அநுராதபுரம் 2.பொலநறுவை
3.வன்னி 4.திருகோணமலை

47. சர்வதேச அணுசக்தி முகவரகம்(IAEA) தலைமையகம் அமைந்துள்ள இடம்
1.ஜெனீவா 2 அமெரிக்கா
3.வியன்னா 4.நைரோ

48. 2014-2017 சார்க் நாடுகளின் செயலாளர் நாயகமாக விளங்குபவர்
1.அப்துல்கலாம் 2.இப்ராம்கிம்ஹுசைன்
3.அகமட்சலீம் 4.அர்ஜின்பகதூர்

49. குறைந்த வயதில் நோபல் பரிசைப் பெற்றவர்
1.மேரிகியூரி 2.வில்லிங் லோரன்ஸ்
3.தாகூர் 4.புருடோமோ

50. 'டேய்ன்' உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்ட இரு நாடுகள்
1.பொஸ்னியா-யுகோஸ்லாவியா 2.பொஸ்னியா-கெர்சகோவினா
3.சேர்பியா-பொஸ்னியா 4.பொஸ்னியா-பிரான்ஸ்

51. சுகாதாரமான,திறன்மிக்க சுற்றுப்புறச் சூழலுக்கான கோட்பாடுகளை வலியுறுத்துவதுடன் மனித சுற்றுப்புறச்சூழல் சம்பந்தப்பட்ட அலுவல்களில் சர்வதேச ஒத்துழைப்பை வழங்க உருவாக்கப்பட்ட அமைப்பு
1.UNFPA 2.UNEP
3.IMO 4.UNDP

52. சர்வதேச கிரிக்கெட் சபையின்(ICC) தலைமையகம் அமைந்துள்ள இடம்
1.டோகா 2.அவுஸ்திரேலியா
3.பிரிட்டன் 4.டுபாய்

53. முதலாவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்ற இடம்
1.பிரான்ஸ் 2.போர்த்துக்கல்
3.உருகுவே 4.பிரேசில்

54. உலகில் அதிகூடிய வெப்பம் கொண்ட இடமாக கருதப்படுவது
1.சீராப்புஞ்சி 2.சைபீரியா
3.அசீசியா 4.தென்னாபிரிக்கா

55. 2015 ஜனவரியில் குரோசியாவின் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பெண்மணி
1.கொலிண்டாகிரபர் 2.வலடிமிர்சஞர்
3.இவோஜொசிபோவிக் 4.ஸ்ரீபன் மெசிக்

56. உலகிலே மிகப்பெரிய மசூதி காணப்படும் நாடும்,தலைநகரும் எது?

57. ஒருநாட்டின் பிரதமராக அதிககாலம் பதவி வகித்த இவர் உலகிலே அதிககாலம் பிரதமராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்?

58. பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு?

59. 'விக்கிலீக்ஸ்' நிறுவனத்தின் உரிமையாளரின் பெயர் என்ன?

60. "டைனமற்" எனும் வெடிமருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?

61. திரைப்படங்களிற்கு தணிக்கை இல்லாமல் அப்படியே வெளியிட அனுமதிக்கும் நாடு எது?

62. சர்வதேச விமான நிலையம் அமைந்திருக்கும் நாடு எது?

63. விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு எது?

64. வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிரினம் எது?

65. தாஜ்மஹாலை உருவாக்கிய தலைமைச்சிற்பியின் பெயர் என்ன?

66. திருமணத்தின் போது தேசிய கீதம் கட்டாயமாகப் பாடப்படும் நாடு எது?

67. உலகின் இராணுவம் இல்லாத நாடு எது?

68. 2018 ஆம் ஆண்டு கொமன்வெல்த் போட்டிகள் நடைபெறும் இடம் எது?

69. டெஸ்ட் போட்டியில் 10,000 ஓட்டங்களை எடுத்த முதல் வீரர் யார்?

70. உலக நாடுகளில் அமெரிக்க உளவு நிறுவனம் ரகசியமான மின்னஞ்சல் மூலம் கண்காணித்ததை உலகிற்கு அம்பலப்படுத்திய அமெரிக்கர் யார்?

71. இலங்கை மத்திய வங்கியின் 12ஆவது ஆளுநரின் பெயர் என்ன?

72. RIO+20 என்பதனால் நீர் அறிந்து கொண்டது யாது?

73. உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் முகம்மது அலியின் இயற்பெயர் என்ன?

74. வரலாற்றுச் சிறப்பு மிக்க (F) போட் நொக்ஸ் எனும் இடம் அமைந்துள்ள நாடு எது?

75. எந்த நாட்டின் தேசிய கொடியில் அதன் தேசப்படம் பொறிக்கப்பட்டுள்ளது?

76. டொப்ளர் விளைவு என்பது எதனைக் குறிக்கிறது?

77. சமாதானத்திற்கு வெண்புறாவைப் பயன்படுத்திய ஓவியர்?

78. சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள நாடு எது?

79. உலகின் மிகப்பழைமையான பாராளுமன்றத்தின் பெயர் யாது?

80. பிரிட்டனின் காலனித்துவத்திற்கு உட்படாமல் கொமன் வெல்த் அமைப்பில் உறுப்பினராக அங்கம் வகிக்கும் நாடு எது?

*(முற்றும்)*

**ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்**

# உழவாரப்படையாளி

## திருநாவுக்கரசரின் குருபூசை தினம் இன்றாகும்

சைவ சமயத்தவராகிய நாம் சித்திரை சதயம் என்றால் அப்பர் சுவாமிகளை நினைக்காமல் விடமுடியாது.

இவருடைய பிள்ளைத்திருநாமம் மருணீக்கியார். இவரை அப்பர், தருமசேனர், நாவுக்கரசு, திருநாவுக்கரசர், வாகீசர், ஆண்டஅரசு, தாண்டகவேந்தர், வாக்கின் பெருவிறல் மன்னர், தமிழ்மொழித் தலைவர் என்றெல்லாம் பல காரணங்களுக்காக அழைத்து பெருமை கொள்கின்றோம்.

தமிழ்மொழித் தலைவராகிய அப்பர் சுவாமிகளை உழவாரப்படையாளி என அழைத்த மை இந்த நூற்றாண் டிற்கு மிகவும் பொருத்தமானதும் உன்னதமானதும் ஆகும். ஆகவே சைவர்களாகிய நாம் அனைவரும் இவரைக் கருத வேண்டிய தேவைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

திருநாவுக்கரச சுவாமிகள் சிவன் உறையும் சைவத்திருக்கோயில்கள் எங்கும் சென்று திருவீதிகளில் உள்ள புற்களையும் செடிகளையும் தம் உழவாரத்தால் செருக்கி தூய்மை செய்வார். திருவீதிகள் எல்லாம் புனிதம் மிகுந்தவை என்று அன்றே கற்பித்தவர் அப்பர் சுவாமிகள் ஆகும்.

இவ்வாறாக உழவாரத்தை தாங்கிச்சென்று திருக்கோவில்களுக்கு சென்றமையாலேயே உழவாரப் படையாளி என



போற்றப்பட்டார்.

இவர் பாடிய முதலாவது திருப்பதிகம் **கூற்றாயினவாறு விலக்ககலீர்..** என்று தொடங்குகின்றது. அவருக்கு ஏற்பட்ட சூலை நோயில் இருந்து நீங்கும் பொருட்டாகவே இப் பதிகத்தைப் பாடினார்.

இவருக்கு சமணர்களால் ஏற்பட்ட தீமைகளையும் கொடுமை களையும் எதிர்த்து போராடி இறைவன் திருவருளால் பல அற்புதங்கள் செய்து உய்தி பெற்றார். நாமார்க்கும் குடியல்லோம் என்ற தேவாரத்தில் இருந்து இறைவனை வழிபடும் அடியார்களுக்கு ஒரு தீங் கும் வர மாட்டாது என்று அஞ்சாமையை எடுத்து உரைக்கின்றார்.

இன்றைய நவீன கலியுக உலகிலே வாழ்கின்றமையால் நாங்கள் எல்லோரும் ஈழ நாட்டில் உள்ள சைவாலயங்கள் தோறும் சென்று வழிபாடு செய்து திருவீதிகளை எல்லாம் பார்வையிட வேண்டும். சரியைத் தொண்டு செய்த தூய்மை செய்ய வேண்டும். புனிதம் மிக்க திருத்தலங்களின் திருவீதிகள் புனிதம் பெற வேண்டும். திருக்கோவில்களின் உள் வீதிகளில் நாம் மௌனம் காத்து இறைவனின் பெரும் புகழைப்பாடிப் பணிதல் வேண்டும்.

மேலும் அப்பர் சுவாமிகள் தமது தேவாரப் பதிகமான நிலைபெறுமா எண்ணுதியே என்ற தேவாரத்தின் வாயிலாக நாம் செய்ய வேண்டிய சரியைத் தொண்டிற்கு விளக்கம் தந்துள்ளார்.

எனவே இன்றைய குரு பூசை நாளில் சிவாலயங்களின் திரு வீதிகளை தூய்மை செய்தல் சைவப் பெரு மக்களின் கடனன்றோ.

**கா. சிவபாலன்**

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் திருமுறை மனனப் போட்டிப் பரிசளிப்பும்

வண்ணை- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் திருமுறை மனனப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்குருபூசைநிகழ்வில்அபிஷேகம், பூசையைத்தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவுக்கு யாழ். மாநகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நா.ரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குபரிசில்களையும்சான்றிதழ்களையும் வழங்குவார்.

திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு 26.04.2016 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றோர்,

**பாலர் பிரிவு**

முதலாம் இடம் ப.பகீரதி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், 2 ஆம் இடம் இருவர் செ.செல்வரூபினி- யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, சு.திரிபர்ணா-காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்

**சிறப்பு பரிசு பெறுவோர்**

அ.ஆனந்தசேயோன்- யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை, ந.டிலானி- சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப் பாடசாலை, ஆ.அரவிந்தன்- காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை, சி.பிரவீன்- சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை, ம.தணிகா- நீர்வேலி செல்வக் கதிர்காம சுவாமி அறநெறிப்பாடசாலை, சி.சிவாத்மிகன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், பி.பிரனிகா-கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், சுகாவியா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், மு.சாத்வீகன்-கோண்டாவில் கைலாசநாத வேத சிவாகமஅறநெறிப்பாடசாலை, யே.உதயநிதி-யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் சி.கஜானி - சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை, 2 ஆம் இடம் சி.ஸ்ருதி-கோண்டாவில் கைலாசநாத வேதசிவாகம அறநெறிப்பாடசாலை, 3 ஆம் இடம் ச.வைஷ்ணவி- யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை


**சிறப்பு பரிசு பெறுவோர்**

கி.சுரபி-யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, அ.ஆதித்தன்- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கோ.சர்மிகா-சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை, சி.பவஹஜன்- யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, கு.யுகானா-சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை, மு.தேஜஸ்வினி-யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, சி.தவநிதி-காரைநகர் கிழவன்காடு கலாமன்றம், ஜெ.தக்ஷனன்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, அ.ஆதித்தியா-காரைநகர் கிழவன்காடு கலாமன்றம், பா.தனுஷன்-காரைநகர் கிழவன்காடு கலாமன்றம். (இ

# முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும்-ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ எதிர்பார்த்த மக்கள் ஜனநாயகத்தை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் நடைபெற்ற ரணசிங்க பிரேமதாஸவின் 23 ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.



கட்சிக்குள் கட்சியை திருத்தி அமைக்க முடியும். சிலர் இனவாதத்தை பரப்ப முயற்சித்து வருகின்றனர்.

ஜனாதிபதி பிரேமதாஸ உயிருடன் இருந்திருந்தால், நல்லாட்சிக்கு தனது கூடிய ளவு ஒத்துழைப்புகளை வழங்கியிருப்பார் எனவும் பிரதமர் தெரிவித்தார். (இ-5)

# உழவாரத் தொண்டாற்றி சைவ சமயத்தை வளர்த்த சைவசமய குரவர் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சைவ சமய குரவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் ஆவர். இவர்கள் சிவத்திருத் தலங்கள் தோறும் சென்று இறைவன் மேல் கருணை கொண்டு இறைவனை உள் அன்போடு வணங்கி அருள் திருப்பாசுரங்கள் பாடியவர்கள். சைவசமயத்தின் உண்மை நிலை நாட்டியவர்கள். அற்புதங்கள் பல நிகழ்த்தியவர்கள். இறைவன் மேல் கொண்ட கருணையினால் வாழ்நாள் முழுவதும் சிவத்திருத்தலங்கள் தோறும் சென்று தேவாரத் திருப்பதிகங்கள் பாடி உழவாரத் தொண்டாற்றி இறைவன் அருளால் அற்புதங்கள் பல செய்து இறைவனிடம் முத்தி அடைந்த திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினம் இன்றாகும்.

திருநாவுக்கரசரை அப்பர், வாகீசர், நாவுக்கரசர், உழவாரப்படையாளி, தாண்டகவேந்தர் எனவும் அழைப்பர். நாவுக்கரசர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் நான்காம், ஐந்தாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நாவுக்கரசர் காட்டிய நல்வழியிலே சைவ சமயத்தவர்கள் ஆகிய நாங்கள் திருத்தலங்கள் தோறும் சென்று எமது துன்ப, துயரங்களைப் போக்க இறைவனை மனமுருகி தேவாரப் திருப்பதிகங்கள் பாடி, உழவாரத் தொண்டாற்றிஅவனருள்பெற்று இந்த மண்ணிலே எல்லோரும் நல்ல வண்ணம் வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக!

**கலாவித்தகர்**
**திருமதி மலர்விழி கனகசபை**
**சண்டிலிப்பாய்**

# குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களை கட்டுப்படுத்துவதற்கு உதவ வேண்டும்

## பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை



நெல்லியடிப் பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இடம் பெற்று வரும்சட்டவிரோதமானசெயல்கள், குற்றச் செயல்கள் மற்றும் மது போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட சமூக சீரழிவுகள் என்பனவற்றை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களும் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி அ.பியந்த சவில் பாதுகாப்பு குழுக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை பொதுமக்கள் தெரிவிக்கையில், பொலிஸ் சோதனைச் சாவடி கப்பூது பகுதியில் வேண்டும். இவ் வீதியினால் பயணம் செய்வோர் ஆட்கள் நடமாட்டம் அற்ற கப்பூது வெளிப்பகுதியில் செல்லும் போது அப்பகுதியில் நிற்கும் சமூக விரோதிகள் அச்சுறுத்துவதாகச் சுட்டிக்காட்டினர்.

நெல்லியடி புதிய சந்தை பகுதி வீதியில் மஞ்சள் கோடு இடப்பட வேண்டும் எனவும் இந்தக் கோரிக்கை ஒரு வருடமாக விடப்பட்டு வருகிறது எனவும் ஆனால் வீதி அதிகார சபை தட்டிக் கழித்து வருவதாக கூறினார்கள்.

வடமராட்சிப் பகுதியில் ப.நோ. கூட்டுறவுச் சங்கம் தனியார் கடையில் 5 முறைக்கு மேல் களவு போயுள்ளது.

அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி களவுகள் குறித்து தற்பொழுது விசாரணைகள் செய்து வருகின்றோம். குற்றம் செய்தவர்கள் கைது செய்யப்படுவார்கள் என கூறினார்.

இதேவேளை அதிகமான பெற்றோர்கள் பிள்ளை களை நேரடியாக கண்காணிப்பில் வைத்திருப்பதில்லை. தவறுகளைத் தட்டிக் கேட்பதில்லை எனவும் கூறினார்.

இவ்வாறு நேற்று முன்தினம் 30 ஆம் திகதி நெல்லியடிப் பகுதியில் இடம் பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் பல விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டன. (இ-60)

# அம்பாறையில் வாள் வெட்டு ஐவர் காயம்;இருவர் கைது

(கொழும்பு)

மருதமுனைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

காலை ஆறு மணியளவில் மருதமுனை 06ஆம் பிரிவு மக்பூலியா கிராமத்தில் வீடு ஒன்றுக்குள் புகுந்த சிலர் அங்கிருந்தவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளதுடன் அவர்கள் மீது வாள்வெட்டு நடத்தியுள்ளனர்.

இதனால் காயமடைந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவருள் நால்வர் கல்முனை ஆதார வைத்தியசாலையிலும் மற்றொருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை அவர்களது உறவினர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களை நாளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாமா - மருமகன் ஆகியோரிடையான சொத்துப் பிரச்சினை தொடர்பில் ஏற்பட்டிருந்த முறுகல் நிலையே வாள்வெட்டு சம்பவத்திற்கு காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில்இருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5)

# கூட்டு எதிரணியின் மேதின பேரணி



கூட்டு எதிரணியின் மே தின ஊர்வலம் நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையம் முன்பிலிருந்து நேற்று பிற் பகல் 2 மணியளவில் ஆரம்பித்து குறித்த பேரணி பொல் லேங்கொட சந்தி ஊடாக கருலப்பனை மைதானத்தை அடைந்தது. இந்த பேரணி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, பந்துல குணவர்தன, தினேஸ் குணவர்தன உள்ளிட்டோர் இந்த ஊர்வ லத்தில் கலந்து கொணடனர்.


## ஐ.தே.கவின் மே தின ஊர்வலம்



ஐக்கிய தேசிய கட்சி மே தின ஊர்வலம் மத்திய கொழும்பில் நேற்று பிற்பகலில் இருந்து ஆரம்பித்துள்ளது.

இந்த பேரணி மருதானை சுற்று வட்டம், பொரளை வீதி, பேஸ்லைன் ஊடாக கெம்பல்பார்க்கை அடைந்தது. பரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அமைசசர்கள் மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-5)

## மட்டக்களப்பில் மே தின பவனி



சர்வதேச தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில பல்வேறு நிகழ்வுகள் நடை பெற்றன. மட்டக்களப்பு ஆட்டோ சாரதிகள் நலன் புரி சங்கத்தின் சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வுகள் நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. (இ-5)

## மே தினத்திற்கு எதிர்ப்பு; ஹற்றனில் ஆர்ப்பாட்டம்



மே தினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஹற்றன் நகரில் கவனயீரப்புப் போராட் டம முன்னெடுக்ககப்பட்டுள்ளது.

மலையக சிவில் அமைப்புகளின்ஏற்பாட்டில்முற்பகல 11 மணியளவில் ஆரப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபா நாள் சம்பளம் பெற்றுக் கொடுக்கப்பட வேண் டும, தொழிலாளர் களுக்கான சலுகைகளை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என பல கோரிக்கைகளை முன் வைத்து பதாதைகளை ஏந்திய வணணம் ஆர்ப்பாட்டம் முனனெடுக்கப்பட்டுள்ளது.

தங்க ளின் கோரிக்கைகளுக்கு பதில் வழங்காத பட்சத்தில் மலையகம் முழுவதும் கறுப்புக் கொடி போராட்டங்கள ஆரம்பிக்கப்படும் எனவும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர். (இ-5)

## ஜே.வி.பியின் மே தின ஊர்வலம்




மக்கள் விடுதலை முன் னணியின் மே தின ஊர்வலம் தெஹிவளை எஸ்.டீ.எஸ்.ஜயசிங்க விளையாட்டு மைதானத்தின் முன்றலில் இருந்து ஆரம்பித்தது. இந்த ஊர்வலம் முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது. முன்னணியை சார்ந்த தொழிற்சங்கங்கள் மற்றும் கட்சிகள் இந்த பேரணியில் பங்கேற்றன. இந்த பேரணி எஸ்.டீ.எஸ். ஜயசிங்க விளையாட்டு மைதானத்தில் இருந்து தெஹிவளை வைத்தியசாலை வீதி, வெள்ளவத்தை மற்றும் கிருலப்பனை வீதி ஊடாக கொழும்பு பீ.ஆர்.சி மைதானத்தை சென்றடைந்தது.




## ஆறாத நினைவலைகள் ஆறில்!

### செல்வன்.மகாலிங்கம் சதீஷன்

(பணிப்பாளர் - பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்)

ஆண்டுகள் ஆறு சென்ற போதிலும்
அகலவில்லை எம் மனங்களில் இருந்து - நீ
அன்புக்கரம் கொடுக்கும் உன்னை
கொன்றொழித்தனர் கொடிய அரக்கர்கள்.
அகலக் கண் கொண்டு அவனியில் - ஓங்கும் உன் எண்ணங்கள்
தரணிவரை ஏங்கும் உன் உறவுகள்

(C-4494)

மலர்வு 09.09.1984 உதிர்வு 02.05.2010 பிள்ளையார் கோவில் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

# கார்க்குண்டு தாக்குதலில் 23 பேர் உடல் சிதறிப் பலி

(பக்தாத்)

**ஈராக் நாட்டில் கார் குண்டு தாக்குதலில் சிக்கி 23 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். இதேவேளை 38 பேர் படுகாயமடைந்தனர்.**

## 38பேர் படுகாயம்



**தீவிரவாதிகள் தாக்குதல்**

ஈராக் நாட்டில் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேன் வீழ்ச்சிக்கு பின்னர் தீவிரவாதிகள் தாககுதல் நடைபெறாத நாளே இல்லை என்கிற அளவுக்கு குண்டுவெடிப்புகள் தினந்தோறும் நடந்து வருகின்றன.

அங்கு ஐ.எஸ்.தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க கூட்டுப்படைகள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வந்தாலும், அவர்களை அடியோடு ஒழிக்க முடியாமல் திணறி வருகின்றனர்.

**ஒரே மாதத்தில் 1,119 பேர் பலி**

பக்தாத் அல் ஒபைதி என்ற இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த குண்டு வெடிப்பில் சிக்கி சிவிலியன் ஒருவர் உடல் சிதறி உயிரிழுந்தார். 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதேபோன்று அதுல் என்ற இடத்தில் நடந்த கார் குண்டுவெடிப்பில் ஒருவர் பலி ஆனார்.

கடந்த மார்ச் மாதம் மட்டும் ஈராக்கில் 1,119 பேர் தீவிரவாதிகள் தாக்குதல்களில் பலியாகி உள்ளதாகவும், 1,561 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் ஐ.நா. புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

பலியானவர்களில் 575 பேர் அப்பாவி பொதுமக்கள். ஈராக் படையினர் 544 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். தீவிரவாதிகள் தாக்குதல் பெரும்பாலும் தலைநகர் பக்தாத்தையும், அதன் சுற்றுப்புறங்களிலும்தான் அதிகமாக நடந்து வருகின்றன. இது ஈராக் அரசுக்கு பெருத்த சவாலாக அமைந்துள்ளது.

**கார் குண்டுவெடிப்பு**

இந்த நிலையில், ஈராக்கில்பக்தாத்துக்கு தென்கிழக்கே அமைந்துள்ள காதிமியா என்ற இடத்தில் 7ஆவது ஷியா இமாம் முசா இபின் ஜப்பார் அல் காசிமின் நினைவு நாளை கடைப்பிடிப்பதற்காக ஷியா பிரிவினர் நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது நஹ்ராவன் என்ற இடத்தில் வெடிகுண்டுகள் நிரப்பிய காரில் சென்ற தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவன் அந்த காரை கூட்டத்தினர் மத்தியில் மோதி வெடிக்க செய்தான்.

இதில் கார் பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது. கூட்டத்தினர் உயிர் பிழைப்பதற்காக நான்கு புறமும் அலறியவாறு ஓடினர். கார் குண்டு வெடிப்பால் அந்தப் பகுதியில் பெருமளவு புகை எழுந்தது.

**23 பேர் உடல் சிதறி பலி**

இந்த குண்டு வெடிப்பில் 23 பேர் உடல் சிதறி உயிரிழுந்தனர். 38 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த குண்டு வெடிப்பு குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸ் படையினரும், பாதுகாப்பு படையினரும் அங்கு விரைந்து சென்று சம்பவ இடத்தை சுற்றி வளைத்தனர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அம்புலன்சுகள் மூலம் வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்தனர்.

இந்த குண்டுவெடிப்பு நடந்த பகுதி போர்க்களம் போல உரு மாறியது. இரத்தக்களறியாக காணப்பட்டது. மனித உடல் உறுப்புகள் சிதறிக்கிடந்ததை காண முடிந்தது.

இந்த தாக்குதலுக்கு எந்தவொரு தீவிரவாத இயக்கமும் உடனடியாக பொறுப்பு ஏற்கவில்லை.

இருப்பினும் பக்தாத் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் ஐ.எஸ். தீவிரவாதிகள்தான் தாக்குதல்கள் நடத்தி வந்துள்ளனர்.


எனவே இந்த தாக்குதல்களையும் அவர்களே நடத்தி இருப்பார்கள் என நம்பப் படுகிறது.

இதற்கிடையே வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (இ-5)




# கென்யாவில் கன மழையால் கட்டடங்கள் இடிந்து விபத்து

## 14 பேர் உயிரிழப்பு



(நைரோபி)

ஆபிரிக்க நாடான கென்யாவில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்து வந்தது. இந்த மழையினால் அங்கு பல கட்டடங்கள் இடிந்தன.

தலைநகர் நைரோபியில் கடந்த வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி இரவு 9 மணிக்கு 6 மாடி கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கி 7 பேர் உயிரிழுந்தனர். பொலிஸார, தீயணைப்பு படையினர், பாதுகாப்பு படையினர் என பல தரபபினரும் முழு வீச்சில் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் 121 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர. அவர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். பலரது நிலைமை மோசமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும்.

கட்டடம் இடிந்து விழுந்த இடத்தை நைரோபி துணை ஆளுநர் ஜோனத்தான் நேற்று நேரில் பார்வையிட்டார். கட்டடம் இடிந்து விழுந்தது பறறி விசாரணை நடத்தப்படும என அவர் அறிவித்தார்.

இதேபோன்று மழை தொடரபான விபத்துக்களில் சிக்கி மேலும் 7 பேர் பலியாகினர். (இ-5)

# சிரியாவில் 2 ஆண்டுகளில் 4,000 பேரை கொன்று குவித்த ஐ.எஸ். தீவிரவாதிகள்

(லண்டன்)

லண்டனை சேர்ந்த சிரியாவிற்கான மனித உரிமைகள் ஆணையம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தால் மனித உயிரிழப்புகள் நிகழ்ந்திருப்பவற்றை ஆராய்ந்து புள்ளிவிபர தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூன் 2014இற்கு பிறகு ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறிச்செயல் உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. அடிக்கடி, வெடிகுண்டு தாக்குதல்கள், தலை துண்டிப்புகள், துப்பாக்கிச்சூடு, கல் எறிந்து கொலை செய்தல், கட்டடங்களுக்குள் அடைத்து வைத்து தீ மூட்டுதல் என கொடூரமான பல செயல்கள் அரங்கேறி வருகின்றன.

கடந்த 22 மாத ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் சிரியாவில் 4,144 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சென்ற ஆண்டு ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்த லண்டனை சேர்ந்த மாணவர் ஹேரி சர்போ செய்தித்தாள் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் விளக்கிச் சொன்னது குறிப்பிடத்தக்கது.

அப்பாவிகளை பணயக் கைதிகளாக பிடித்து சென்று கல் எறிந்து கொலை செய்வது, தலையை துண்டித்து கொலை செய்வது, துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்வது, கைகளை துண்டித்து கொலவது உடபட பல கொடூர முறைகளில் வெறிச்செயலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈடுபட்டதை வெளிச்சம் போட்டு காட்டியிருந்தார்.

அதிலும், குறிப்பாக, 13 வயதுசிறுவர்களை தற்கொலை வெடிகுண்டு பெல்ட்டுகளை இடுப்பில் மாட்டச் செய்தும், காலஷ்நிகோவ் ரக துப்பாக்கிகளை இயக்க பயிற்சிகள் அளித்தும், வெடிகுண்டு கார்களை ஓட்ட பயிற்சியளித்ததையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்லாமியத்திற்கு விரோதமாக செயறபடுவது மட்டுமன்றி மனிதநேயமின்றியும் நடநது வருகிறார்கள்.

அவரகளது சொந்த சகோதரர்களையே உளவாளியாக சந்தேகப்பட்டு கொலை செய்கிறார்கள் என்றும் தெரிவித்து இருந்தார். தற்போது ஜேர்மனியில் சிறையில் உள்ள ஹேரி சர்போ. இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# நோர்வேயில் ஹெலிகொப்டர் விபத்து; 13 பேர் பலி

நோர்வேயில் ஹெலிகொப்டர் ஒன்று விபத்திற்குள்ளானதில் அதில் பயணித்த 13 பேரும் பலியானார்கள். நோர்வேயின் பெரிய நகரான பெர்கானில் அமைந்துள்ள தீவில் இந்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளது.

2 விமான குழுவினர் மற்றும் 11 பணியாளர்களுடன் பயணித்த ஈரோகொப்டர் ஈசி 225எல் என்ற இந்த ஹெலிகொப்டரின் மேற்பகுதியில் அமைந்துள்ள ரோட்டர் தனியாக கழன்று 300 மீற்றர் தூரத்தில் சென்று விழுந்துள்ளது.

இதனால் கட்டுப்பாட்டை இழந்த ஹெலிகொப்டர் நகரில் அமைந்துள்ள தீவில் வெடித்து சிதறியது, இதில் விமானம் முழுவதும் சேதமடைந்ததில் விமானத்தில் பாதி பாகங்கள் தரையிலும், மீதி பாகங்கள் தண்ணீரிலும் சிதறியுள்ளன. (இ-5)









# அசல் குருவி!

முன்னொரு காலத்தில் அழகபுரி என்னும் நாட்டை பலம் வாய்ந்த ஒரு அரசர் ஆண்டு வந்தார். அவர் தோட்டத்தில் விதவிதமான செடிகளையும், மரங்களையும் வளர்த்து வந்தார். அவர் வளர்த்து வந்த மரங்களின் ஒன்றில் அழகான குருவி ஒன்று கூடு கட்டி வசித்து வந்தது. பகலில் உணவை தேடி அலையும் குருவி, இரவில் தன் மென்மையான குரலில் இனிமையாக பாடி வந்தது. குருவி பாடும் பாட்டு அரண் மனையை சுற்றி இருந்த வர்களை மட்டும் அல்லாது, அண்டை நாட்டு வழிப்போக் கர்களையும் தன் இனிமையான குரலால் மகிழ்வித்து வந்தது.



குருவியின் இனிமையான குரலை பற்றி கேள்விப்பட்ட அரசர், குருவியை பிடித்து ஒரு கூண்டில் அடைத்து அதை அரண்மனை மண்டபத்தில் மட்டும்தான் பாட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

குருவியும் வேறு வழி தெரியாமல், அரசருக்கு பயந்து, அரண்மனை மண்டபத்தில் மட்டும் அரசர் முன்னிலையில் பாடி வந்தது.

ஒருநாள் குருவி ஒரு இனிமையான பாடலை பாடி அரசரின் கண்களில் இருந்து ஆனந்த கண்ணீரை வரவழைத்துவிட்டது. குருவியின் இனிமை யான குரலில் இருந்து வரும் பாடலை அரசர் மட்டும் கேட்டு அனுபவிக்காமல், தன்னை சுற்றி இருந்த நாட்டின் அரசர்களையும் அழைத்து, குருவியின் குரலில் இருந்து வரும் இனிமையான பாடலை கேட்டு மகிழ்விக்கச் செய்தார்.

இனிமையான குரலால் அனைவரையும் மகிழ்வித்த குருவி, விரைவில் அரண்மனை பாடகியாகிவிட்டது.

ஒருநாள் வெகு தூரத்து தேசம் ஒன்றில் இருந்து வந்த ஒரு வியாபாரி, உலோகத்தால் உருவாக்கப்பட்ட குருவி ஒன்றை அரசருக்கு பரிசாக அளித்தான். அந்த குருவியின் உடல் முழுவதும் ரத்தின கற்கள் பதிக்கப்பட்டு மின்னிக் கொண்டிருந்தன. அந்த குருவியை ஏதாவது ஒரு இடத்தில் தொட்டால், அது பாட ஆரம்பிக்கும். அந்த உலோகத்தால் ஆன குருவியும் உயிர் உள்ள குருவியைப் போலவே பாடி, அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கச் செய்தது. மக்கள் உலோக குருவியின் பாடலையும், உயிர் உள்ள குருவியின் பாடலையும் மாறி, மாறி கேட்டு மகிழ்ந்தனர்.

உலோகக் குருவியில் இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததால், அது வெகு நேரம் வரை களைப்பில்லாமல் பாடி, அனைவரையும் மகிழ்வித்து வந்தது. உயிர் உள்ள குருவி சிறிது நேரம் பாடினாலே களைத்துப் போய் பாடலை நிறுத்திவிடும். நாளடைவில் உயிர் உள்ள குருவியை விட உலோகத்தால் செய்யப்பட்டு ரத்தின கற்கள் பதிக்கப்பட்டிருந்த குருவி, மக்கள் மத்தியில் பெருமையாக பேசப்பட்டது. மக்கள் சிறிது நேரமே பாடி களைத்துப் போகும் குருவியை நாடி செல்வதை நிறுத்திவிட்டனர். மன வேதனை அடைந்த உயிர் உள்ள குருவியும் அரண் மனையையும், அரசனையும் விட்டு பிரிந்து வெகு தூரத்தில் இருந்த ஒரு தேசத்துக்கு சென்று விட்டது.

அரசர் உயிர் உள்ள குருவி காணாமல் போனதைப் பற்றி கவலைப்படவில்லை. அவருக்கு அவர் நினைத்த போதெல்லாம் பாடி மகிழ்விக்க உலோகக் குருவி இருந்ததால், உயிர் உள்ள குருவியை மறந்தே விட்டார்.

ஒருநாள் அரண்மனையில் உலோகத்தால் ஆன குருவி பாடிக் கொண்டிருந்த போது, திடீரென வெடி வெடிப்பது போன்ற சத்தம் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். சத்தம் கேட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் உலோகக் குருவியிடம் இருந்து வந்துக் கொண்டிருந்த பாடல் சட்டென்று நின்று விட்டது. அரசரும் உலோகக் குருவியிடம் இருந்து வந்துக் கொண்டிருந்த பாடல் நின்று விட்டதால், மறுபடியும் உலோகக் குருவியை பாட வைப்பவர்களுக்கு தக்க சன்மானம் அளிப்பதாக தண்டோரா போடும்படி, தன் அரசாங்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டான்.

உள் நாட்டில் இருந்தும், வெளி நாட்டில் இருந்தும் நிறைய பேர் வந்து உலோகக் குருவியை பாட வைக்க முயற்சி செய்தனர். ஒருவராலும் உலோகக் குருவியை பாட வைக்க முடியவில்லை.

(தொடரும்)




- 1568 - ஸ்கொட்லாந்தில் லொக் லெவென் அரண மனையில் சிறை வைக்கப்பட்டிருந்த முதலாம் மேரி அங்கிருந்து தப்பி வெளியேறினாள்.
- 1808 - மாட்ரிட் மக்கள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளருக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர.
- 1814 - முதலாவது மெதடிஸ்த ஆயர் தோமஸ் கோக் தமது மதத்தைப் பரப்புவதற்காக கப்பலில் இங்கிலாந்தில் இருந்து இலங்கை வரும் வழியில் காலமானார்.
- 1876 - பல்கேரியாவில் ஏப்ரல் கிளர்ச்சி ஆரம்பித்தது.
- 1885 - புல்ஜிய மன்னர் இரண்டாம் லெயொபோல்ட் கொங்கோ சுதந்திர நாட்டை அமைத்தான்.
- 1889 - எதியோப்பியாவின் அரசன் இரண்டாம் மெனெலிக் என்பவன் இத்தாலியுடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கை யின்படி எரித்திரியாவின் முழுப் பகுதியும் இத்தாலிக்குத் தரப்பட்டது.
- 1928 - அமெரிக்காவின் பிரபல கேலிச்சித்திர ஓவியரான வோல்ட் டிஸ்னி பிரபல கேலிச் சித்திரக் கதாபாத்திரமான மிக்கி எலியின் படத்தினை வரைந்தார்.
- 1933 - ஹிட்லர் தொழிற்சங்கங்களை தடை செய்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பேர்லினைத் தாம் கைப்பற்றியதாக சோவியத் ஒன்றியம் அறி வித்தது. ஜேர்மனியப் படைகள் இத்தாலியில் சரணடைந்தனர்.
- 1952 - உலகின் முதலாவது ஜெட் விமானம், டி ஹாவிலண்ட் கொமெட் 1, முதற்தடவையாக லண்டனுக்கும் ஜொகான்னஸ்பேர்க் நகருக்கும் இடையில் பறந்தது.
- 1964 - வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அமெரிக்கக் கப்பல் ஒன்று குண்டுவெடிப்பில் மூழ்கியது.
- 1964 - 8,027 மீற்றர் உயர ஷிஷபங்குமா மலையின உச்சியை சீனாவின் இரு மலையேறிகள் எட்டினர்.
- 1982 - போக்லாந்து போர்: பிரித்தானியாவின் எச்.எம்.எஸ் கொன்கரர் என்ற நீர்மூழ்கிக் கப்பல ஆர்ஜெண்டீனாவின் போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- 2002 - கேரளாவில் பாலக்காடு நகரில் இடம் பெற்ற கலவரங்களில் 8 இந்துக்கள் கொல்லப்பட்டனர்.


பிறப்புக்கள்

- 1921 - சத்யஜித் ராய், இந்தியத் திரைப்பட இயக்குநர் (இ. 1992)
- 1969 - பிறயன் லாறா, மேற்கிந்தியத் தீவுகள் அணி யின் துடுப்பாளர்
- 1975 - டேவிட் பெக்காம், இங்கிலாந்து காற்பந்து ஆட்டக்காரர்

இறப்புகள்

- 1519 - லியனார்டோ டா வின்சி, இத்தாலிய ஓவியர் (பி. 1452)
- 2009 - கே. பாலாஜி, தமிழ்த் திரைப்பட நடிகர், தயாரிப்பாளர்

## சத்யஜித் ராய்



சத்யஜித் ராய் - Satyajit Ray, மே 2, 1921 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இந்தியாவில் உள்ள மேற்கு வங்காளத்தில் பிறந்த, ஒரு உலகப் புகழ்பெற்ற திரைப் பட மேதை.

இவர் ஒரு திரைப்பட இயக்குநர், எழுத்தாளர், இசையமைப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர் என்ற பன்முகத் தன்மைக் கொண்டவர்.

**தன்னுடைய திரைப்படப் பணிக்காக ஆஸ்கார் விருது பெற்ற முதல் இந்தியர், சத்யஜித் ராய். இவருடைய பதேர் பாஞ்சாலி, அபராஜிதோ, அபுர் சன்ஸார் ஆகிய மூன்று திரைப்படங்களும் உலகப் புகழ் பெற்றவை.**

# அமைச்சரவையின் அனுமதியுடன் போர் விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்கு எட்டு போர் விமானங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக திறந்தநிலை கேள்விப்பத்திரத்தை கோர அமைச்சரவை, இலங்கை விமானப்படைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி சிறந்த, நிதிச் சிக்கனமான விமானங்கள் குறித்து ஆராயுமாறு அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளது.

சீனா, இந்தியா, பாகிஸ்தான் , பிரித்தானியா மற்றும் ஏனைய நாடுகளின் விமானங்களை இதற்காக பரிசீலிக்க முடியும் என்றும் அமைச்சரவை தெரிவித்துள்ளது.

இந்த அனுமதியின்படி இலங்கை விமானப்படை எட்டு போர் விமானங்களையும், இரண்டு சரக்கு விமானங்களையும் ஒரு பயிற்சி விமானத்தையும் கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ளது.

இவற்றுக்காக 400 மில்லியன் டொலர்கள் இலங்கை பெறுமதியில் 60 பில்லியன் ரூபாய்கள் வரை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

# ரஷ்யாவிடம் 400 மில்.டொலரை கடனாகக்கோருகிறது இலங்கை

(கொழும்பு)

**ஆயுதங்களை கொள்வனவு செய்யும் நோக்கில் ரஷ்ய அரசாங்கத்திடம் 400 மில்லியன் டொலர் கடனுதவியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.**

கடனுதவியை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மொஸ்கோவிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கும், ரஷ்ய அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது.

இலங்கையின்முப்படைகள் மற்றும் பொலிஸாருக்குத் தேவையான போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கே, 300 தொடக்கம் 400 மில்லியன் கடனுதவி கோரப்பட்டுள்ளது.

போர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும், இந்த உடன்பாட்டில் உள்ளடக்கப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கை தொடர்பில் ரஷ்யா சாதகமான பதிலை வழங்கவுள்ளதாக தகவல்கள வெளியாகியுள்ளன. (இ-5)

# மகிந்தவின் தேர்தல் பிரசாரத்துக்கு சீன நிறுவனம் நிதி வழங்கியமை தொடர்பாக வழக்குத் தாக்கல்

சீனாவின் துறைமுக பொறியியல் நிறுவனம், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரசாரங்களுக்காக நிதியளித்ததாக கூறி, சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நிதிமோசடி தடுப்பு பொலிஸ் பிரிவு இது தொடர்பில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்யவுள்ளது.



இன்னும் மூன்று வாரங்களுக்குள் பொலிஸ் பிரிவு நீதிமன்றத்தில் பி அறிக்கையை தாக்கல்செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பொலிஸ் பிரிவின் தகவல்படி, குறித்த தேர்தல் காலப் பகுதிக்குள் சீனநிறுவனத்தின் 3.117 மில்லியன் ரூபாய்கள் தொடர்பான 11 சந்தேகத்துக்குரிய பணப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த பணப் பரிமாற்றங்கள் தொடர்பில் சீஐடியும் புறமபான விசாரணை ஒனறை மேற்கொண்டுவருகிறது.

இந்த பணத்தின் மூலம் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கான பொருட்கள்கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக நிறுவனத்தினால் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு காசோலை, மகிந்த ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாக ஆதரவு வழங்கிய பிக்குஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணையின் போது குறித்த பிக்கு தாம் காசோலையை பெற்றுக் கொணடமையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதனை தாம் தமது நிரந்தர வைப்பிலிட்டுள்ளதாகவும் பிக்கு தெரிவித் துள்ளார். எனினும் இந்தக் குற்றச்சாட்டை சீன நிறுவனம் மறுத்துள்ளது. (இ-5)

# மாகாண சபைகளை ரத்துச் செய்து சமஷ்டி கோரிக்கையை ஒழிப்போம்

## கெப்பிடியாகொட ஸ்ரீவிமலதேரர்

மாகாண சபைகளை இரத்துச் செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கையை ஒழிக்க முடியும் எனறு கெப்பிடியாகொட ஸ்ரீவிமல தேரர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பேராதனை, கெடம்பே, ராஜோபவனாராமாதிபதி கெப்பிடியாகொட ஸ்ரீவிமல தேரர் சிங்கள வார இதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனின் நடவடிக்கைகளை பார்க்கும் போது அவர் படிப்படியாக சமஷ்டி ஆட்சி முறையை வலியுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த அரசாங்கத்தின் ஊடாக சமஷ்டி ஆட்சியை உருவாக்கிக் கொள்ள முடியும் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருப்பது தெரிகின்றது.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உறவினரான சிவாஜிலிங்கம் இளைஞர்களை உசுப்பேற்றி மீண்டும் ஆயுதப் போராட்டம் ஒன்றை உருவாக்க தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றார்.

அதே நேரம் இந்தியா அதிகாரப் பரவலாக்கல் ஊடாக இந்த நாட்டை தொடர்ந்தும் தனது காலடியில் வைத்திருக்க முயற்சி செய்து வருகின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் வடக்கில் ஒரு சமஷ்டி பிராந்தியமும், மலையகத்தில் ஒன்றும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். முஸ்லிம்கள் கிழக்கில் சமஷ்டி கோரிக்கை விடுக்கின்றனர். ஆனால் தெற்கில் அனைத்து மக்களும் இணைந்து வாழும் நிர்வாக முறை வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறான கோரிக்கைகள் அர்த்தமற்றவையாகும். இந்தச் சிறிய நாட்டை பிளவுபடுத்த முடியாது.

இவ்வாறான கோரிக்கைகளுக்கு அடித்தளமாக அமைந்திருக்கும் மாகாண சபை முறையை இரத்துச் செய்வதன் ஊடாக சமஷ்டி கோரிக்கைக்கு முடிவு கட்ட வேண்டும் என்றும் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## நான்கு பேர் நடுவே நீங்கள்

நான்கு பேர் நடுவே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சிலருக்குத் தெரிவதில்லை.

சிலர் தங்களைப் பற்றிய அருமை பெருமைகளையே பேசிக் கொண்டிருப்பார்கள்; வேறு சிலர் மற்ற மூவரையும் கேலிக்கு ஆளாக்கியோ அவமானம் ஏற்படும் வகையில் பேசியோ மனத்தை சங்கடப்படுத்துவார்கள். இவர்கள் வந்தாலே பேசிக் கொண்டிருக்கும் மற்ற மூவரும் ஓடியே போய்விடுவார்கள் என்பதில் ஐயமென்ன?

நான்கு பேர் சேர்ந்தாலே அவர்கள் சுற்றுப் புறச் சூழ்நிலைகளையும் சொந்தக் கவலைகளையும் மறந்து உற்சாகம் பொங்க பேசத் தொடங்கி விடுவர். அத்தகைய சூழ்நிலைகளில் மிக அவசியமாக இருந்தாலொழிய சீரியஸான விடயங்களைப் பேசக் கூடாது; அதை மற்றவர்கள் விரும்ப மாட்டார்கள். மாறாக, நகைச் சுவை ததும்ப பேச வேண்டும். அந்தக் கும்பலில் ஒருவர் கேலி செய்யப்பட்டால், கேலி செய்யும் மற்றவர்களோடு நீங்களும் சேர்ந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. கேலிக்குரியவருக்கு ஆதரவாகவோ, கேலி செய்பவர்களின் ஆர்வத்தைக் குறைக்கும் வகையிலோ ஏதாவது சொல்லி அந்த நேரத்தில் கேலிக்கு ஆளானவரின் அன்பைப் பெற முயல வேண்டும். இதன் மூலம் மற்ற இருவரின் நன் மதிப்பை நாளடைவில் பெற முடிவதோடு, ஒருவித சுமுகமான சூழ்நிலை உருவாகவும் நீங்கள் உதவியவர்கள் ஆவீர்கள்.

மற்றவர்களின் தகுதிகள், வயது வேறுபாடுகள், எண்ணப் போக்குகள் ஆகியவற்றை அறிந்து நான்கு பேர் நடுவே பேச வேண்டும். அதை விட்டு விட்டுத் தத்துப்பித்தென்று உளறி வைப்பது நன்மதிப்பைக் கெடுத்துக் கொள்ளும் வேலையாகும்.

பாராட்டுக்குரிய விடயங்கள் இருந்தால் பேசலாம். மற்றவர் மனத்தைக் கஷ்டப்படுத்தக் கூடிய விடயங்களையும் வெட்கித் தலை குனிய வைக்கும் விடயங்களையும் பேசுவதைத் தவிர்க்க லாம்.

என்னால் நகைச் சுவையாகவும், ஜனரஞ்சகமாகவும் பேசமுடியாது என்று நம்பிக்கையற்றுப் போனவர்கள் மிகக் குறைவாகவே பேச வேண்டும். மாறாக மற்றவர்கள் பேசும் போது சுவாரசியமாகவும், உணர்சசிப் பாவத்தோடும் கேட்டுக் கொள்ள வேண்டும். நகைச் சுவையான விடயங்களின் போது நன்கு ரசித்துச் சிரிக்க வேண்டும். இத்தகையவர்களை எல்லோரும் மிகவும் விரும்புவார்கள்.

பேசுவது என்றால் தனிப்பட்ட விடயங்களையும் சொந்த அனுபவங்களையும் பேசாமல், மனித இனத்திற்கே சில விடயங்களில் சுவாரசியம் உண்டல்லவா? அவை தொடர்பான பொது விடயங்களாகப் பேச வேண்டும். உங்கள் சந்திப்பு அதன் மூலம் களைகட்டும்.

பெருமை பேசுபவர்களை இத்தகைய சூழ்நிலைகளில் மட்டும் மட்டம் தட்டிப் பேசுவது தான் மற்றவர்களது மனநிலையாக இருக்கும் என்பதால் பணிவாகவே பேச வேண்டும். அடக்கியே வாசிக்க வேண்டும். இப்படிச் செய்தால் மற்றவர்கள் உங்களைப் பாராட்டத் தொடங்குவார்கள்.

ஒருவர் ஒரு பொருளைப் பேசும் போது தலைப்பைச் சட்டெனறு மாற்றக் கூடாது. அவர் சொல்லும் ஒரு சில வார்த்தைகளைக் கொண்டு அது தொடர்பான விடயங்களைப் பேசிவிட்டு மெல்லத் தலைப்பை மாற்றலாம்.

வீணான விவாதங்கள் தேவையில்லை. விவாதம் செய்யும் சுபாவம் உள்ளவர்களை மற்றவர்கள் ஒரு போதும் விரும்புவதில்லை. விவாதத்தில் தோற்றால் நான்கு பேர் நடுவே இப்படி ஆகி விட்டதே என வருத்தப்படுவீர்கள். நீங்கள் வென்றாலோ மற்றவர் உங்களை வெறுக்க முனைவார்கள்.

ஒட்டு மொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால்– பேசுவதற்கு நீங்கள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று மற்றவர்கள் விரும்பும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# அதீத- அரசியல்மயமாகும் முன்னாள் போர்வலய, தற்போதைய வெடிபொருட் கண்டுபிடிப்புக்கள்

## யாழ்.சாவகச்சேரி பகுதியிலுள்ள ஓர் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுத தொகுதியும் தற்கொலை அங்கியும்

(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி...)

அவர்கள் சுட்டிக்காட்டுவது போல ஆயுதப் படைகளும் சாவகச்சேரி பிரதேசத்தை எல்.ரி.ரி.ஈயிடமிருந்த 1995 -96 போன்ற நீண்ட காலத்திற்கு முன்னரே விடுவித்திருந்தனர். ஊடகங்கள் கூறு



வதை நாம் நம்புவதானால் மேற்படி ஆயுதத்தொகுதி அண்மையில் கைப்பற்றப்படுவதற்கு முன்னரே பொலிஸாருக்கும் அதுபற்றிய உறுதியானதொரு தடயமோ தகவலோ கிடைத்திருக்கும். அதேநேரம் வட மாகாண ஆளுநர் றெஜினோலட் கூரே கூறுவது போல் இந்த ஆயுதங்கள் அங்கு கொண்டு வரப்பட்டது சமாதான நோக்கங்களுக்கு என்பதாயிருக்க முடியாது. ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் இருவரதும் அரசாங்கத்தின் விருப்பத்திற்குரிய ஒரு தெரிவே ஆளுநர் என்பதுடன் தமிழ் மிதவாத அரசியலுக்கும் தமிழ் சமூகத்திற்கும் ஏற்புடைய ஒரு சிங்கள மிதவாதியே இவர். போருக்குப் பிந்திய நல்லிணக்க செயற்பாட்டு வழிமுறைகளுக்கு நாட்டின் பெரும்பாலான மக்களின் ஆதரவு இருப்பதாக கூறியிருந்த இவர், "இந்த நல்லிணக்க வழிமுறைகளை ஜீரணிக்க முடியாத தீவிர நாசகார சக்திகளே அவற்றைச் சீரழிப்பதற்கான தொடர் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன" என மேலும் கூறியிருந்தார். புதிதாக கிளம்பும் எந்த வித வன்முறை, வன் செயல் நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முன்னெடுப்புக்களை மீள் சீரமைக்க முடியாதபடி பாதித்து விடுமெனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

### ரணில்- மகிந்த பிணக்கு?

தனித்துவமான அந்த சாவகச்சேரி ஆயுதக் கண்டுபிடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து ஒன்றிணைந்த எதிரணியானது அதனை நாட்டின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தலென்று அவசரமுனைப்புடன் கூறியது மட்டுமல்லாது அரசாங்கமும் இதுமட்டில் முழுமையான உண்மைகளை வெளிவிடப் போவதில்லை என்றும் அடித்துக் கூறியது. அரசியலில் பாரம்பரியமாகவே எதிர்ப்பினைக் காட்டும் எதிர்க்கட்சி அரசியல் என்றும் ஒன்று இங்கு உண்டு என்பதும் உண்மைதானென்றாலும் அரசாங்கமும்கூட பொறுப்புணர்வுடன் செயற்படவில்லை. எனவே ஒன்றிணைந்த எதிரணியின் முக்கிய உறுப்பினர்களான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் போன்றவர்களிடம் கூடுதல் தகவல்கள் இருப்பதாக தோன்றுவதால் பொலிஸார் அவர்களிடமும் விசாரணை செய்ய வேண்டுமென அரச தலைவர்கள் கேட்டனர். எனவே விடயம் பற்றிய பாதி உண்மையை அரசாங்கம் இரகசியமாக மறைத்து விட்டிருப்பதாக மறுதரப்பு கூறியது. அரசியல் சந்தர்ப்பமொன்றை தவற விடாதவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தகவலின் உண்மைத் தன்மை முழுமையாக வெளிவராத போதிலும் உடனடியாகவே பிரதமர்



ரணில் விக்ரமசிங்கவை தொடர்பு கொண்டு தேசிய பாதுகாப்பு மட்டில் 'சாவகச்சேரி சம்பவத்தின் தாக்கம் பற்றிய தனது அக்கறையை வலியுறுத்தினார். முன்னாள் ஜனாதிபதி வலியுறுத்திப் பேசியது போல் இச் சம்பவம் புதிதான ஒன்றாக இல்லையென்றால் அநேகமாக இது முன்னைய சம்பவங்களையொத்த மற்றுமொரு சாதாரண விடயமாகவே இருக்கும்.


சாவகச்சேரியில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட விடயம் மட்டில் ஊகங்களின் மத்தியிலிந்து உடன் நிஜத்திற்கு வர முடியாத நிலையிலும் அதுபற்றி நாட்டிற்கு அறிவிக்க வேண்டிய நிலை பிரதமருக்கு ஏற்பட்டது. எனவே அவர் இவ்விடயம் பற்றி பாராளுமன்றப் பிரதிநிதிகளனைவரும் அறிந்து விவாதிப்பதற்கு வசதியாக மகிந்த ராஜபக்சவும் அங்கு பேசுவதை வரவேற்று ஊக்கமுமளித்தார்.

எனவே, இவ்விடயம் பற்றிய அரைகுறை உண்மைகளுடன் கூடிய ஊகங்களினடிப்படையில் மக்களிடையே கருத்துக்கள் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் மேலும் தாமதிக்காது அரசாங்கத்தின் உறுதிப்பாடு பற்றி நாட்டு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்றமூடாக வெளிப்படுத்தப்படும் நேர்மையான ஒரு கருத்தாடலே நிலைமைகள் மோசமடையாமல் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதற்கு உதவும்.

### கோத்தபாயவுக்கு கட்சிப்பதவி?

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவும் தனது பங்கிற்கு பகிரங்க அறிவிப்புக்களை விடுத்திருந்தார். போருக்குப் பின்னர் புனர்வாழ்வளிக்கப்படாத எல்.ரி.ரி.ஈ சக்திகள் மத்தியில் ஆரம்பமாகும் எந்தவொரு எழுச்சியும் நாடு முழுவதும் வன்முறைச் செயற்பாடுகளுக்கே வழி திறப்பதாக அமையும் என்பதே அவரது கூற்றாக இருந்தது. அரசியல் குரோதங்கள் எத்தகையன

**சண்டே லீடர் பத்திரிகையில் "அதீத- அரசியல்மயமாகும்முன்னாள்போர் வலயதற்போதைய வெடிபொருட்கண்டுபிடிப்புக்கள்"எனும் தலைப்பில்என். சத்தியமூர்த்தி எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்.**




வையாக இருந்தாலும் எந்தக்கட்சிகளோ, குறியாக அரசாங்கமோ, எந்த வகையிலும் பாதுகாப்புப்பிரிவுகளோ தானும் இந்த விடயம் மட்டிலான கோத்தபாய ராஜபக்சவின் அவதானிப்பை குறைத்து மதிப்பிடலாகாது.

இது இல்லையென்றாலுங்கூட மற்றுமொரு விடயத்தில் ஊகித்துப் பார்ப்பதற்கும் இயலாத ஏதோ ஒருவித காரணத்திற்காக கோத்தபாய மற்றுமொரு விசேட செய்தியாக இடம்பிடிக்கிறார். அரசாங்கத்திலிருக்கும் ஜனாதிபதி சிறிசேன தலைமையிலான 'SLFP' பங்காளிப் பிரிவைச் சேர்ந்த நடுநிலை யாளர்கள், கட்சியின் உயர் அதிகார மட்டத்தில் ராஜபக்ஷக்களுக்கு ஏற்கனவே அமைந்திருக்கும் இணக்கப்பாட்டு ரீதியில் கட்சியின் மூத்த உறுப்புரிமைக்கேற்ற அரச பதவியொன்று கோத்தபாயவுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கருத்துக் கூறியிருந்தனர்.

போருக்குப் பின்னருங்கூட அரசியலில் ஒரு பங்கோ பதவி அதிகாரமோ பெற்றுக்கொள்ள விரும்பாத காரணத்தினால் தனது கடமைகள் பாதுகாப்பு அமைச்சில் ஒரு செயலாளர் என்ற பதவி வரையறைக்குட்பட்டதாகவே தொடர்ந்துமிருந்து வந்ததாக பகிரங்கமாகவே கோத்தபாய கூறியிருந்தது உட்பட அவர் பற்றிய விடயங்களோ பிரச்சினைகளோ மேலும் பலப்பலவாகவேதானிருந்தது. சிறிசேனவின் தலைமைத்துவம் தொடர்பற்று விலகியிருந்த 'UPFA' கூட்டணி செயலற்றதாயிருந்தபோதிலும் அதனது 'SLFP' அல்லாத ஏனைய பங்காளிக் கட்சிகளை அநாதரவாகவிட்டு கண்மூடியிருக்க ராஜபக்ஷக்களால் முடியாது.

இருந்தும் போர்- சமாதானம்- பொறுப்புக்கூறல் மட்டிலான விசாரணைகளின் நம்பகத்தன்மை மற்றும் அரசியல் மீள்- இணக்கப்பாடு சம்பந்தமான விரிந்த பார்வையில் கோத்தபாயவுக்கு வழங்கப்படக்கூடிய எந்தவித அரசியல் அல்லது அதிகாரத்துவ அங்கீகாரமும் போர்க்கால கொமாண்டரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேனாவுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்துக்கு அடுத்த படியான ஒன்றாகவே இருக்கும். அதாவது முதலில் பிரதமர் ரணில் தலைமையிலான 'UNP' கட்சிக்குள் ளும் அதனைத் தொடர்ந்து தேசிய பட்டியல் MP' ஆக விரைவில் கிடைத்த முதல் உயர்வினைத் தொடர்ந்து மந்திரி சபையின் அமைச்சராகவும் பதவியில மர்த்தப்பட்டாரவர்.

மைத்திரி- ரணில் தலைமை தாங்கும்- இலங்கையின் தற்போதைய அரசியல் நிலையில் 'UNP' யின் பங்காளியான சரத் பொன் சேகா விடயத்தில் நிகழ்ந்தது போன்ற அல்லது வேறு எந்த விதமான நியமனமோ பதவியுயர்வோ கோத்தபாயவுக்கு வழங்கப்படுமானால் அது அப்போதுங் கூட சமாதான மற்றும் சர்வதேச உறவுகள் விடயத்தில் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாகவேயிருக்கும். அதாவது இனத்துவ ரீதியில் பார்த்தால் சாவகச்சேரியில் இனவாத சாயம் பூசப்பட்டு வெளி வந்தது போன்ற சம்பவங்கள் மாற்று இனவாத சாயம் பூசப்பட்டதாக வேற்று முனைகளிலும் ஆரம்பமாகி வெளிவரக்கூடும். (முற்றும்)

நாட்டில் நிலவும் கடுமையான வெப்பத்தை போக்க மழையை வேண்டி விசேட பிரார்த்தனை ஒன்று நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.யாழ்.கிளிநொச்சி ஜம் இய்யத்துல் உலமா சபைத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட பிரார்த்தனையில் நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# தமிழக மீனவர்கள் 34 பேருடன் 88 படகுகளை விடுவிக்க வேண்டும்

## பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்

இலங்கை கடற்படையினர் கைது செய்த 34 தமிழக மீனவர் கள் மற்றும் அவர்களது 88 படகுகளை விடுவிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று எழுதிய கடிதத்தில்,

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன்பிடி தளத்தில் இருந்து 3 பாரம்பரிய மீன்பிடி படகுகளில் சென்ற 21 மீனவர்களை, கடந்த 27ஆம் திகதி இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கொண்டு சென்றுள்ளனர். இதை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். அவர்கள் தங்கள் பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் ஜலசந்தியில் மீன்பிடிக்கும் போது தான் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியா - இலங்கை இடையில் கடந்த 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால், சர்வதேச கடல் எல்லை என்பது முடிந்துவிட்டதாக மத்திய அரசு கருதக்கூடாது என்பதே தமிழக அரசின் நிலைப்பாடு என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இலங்கை வசம் ஏற்கனவே, 85 படகுகள் மற்றும் 13 மீனவர்கள் உள்ளனர். நீண்டகாலமாக பிடித்து வைக்கப்பட்டுள்ள படகுகள் பயன்படுத்த முடியாமல் சேதமடைந்துவிட்டன. இதனால், ஏழை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை மீட்டு அவற்றை சீரமைத்து விரைவில் மீனவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என மீண்டும் கோரிக்கை வைக்கிறேன்.

மேலும், இலங்கை வசம் தற்போதுள்ள 34 மீனவர்கள் மற்றும் 88 படகுகளை விடுவிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார் என இந்திய ஊடகமான த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## வன்மையாகக் கண்டிக்கின்றோம்

கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையிலிருந்து கேவில் நோக்கி வந்த தனியார் பேருந்து நாகர் கோவில் பகுதியில் வைத்து கும்பல் ஒன்றினால் வழிமறித்து அப் பேருந்தின் நடத்துநரை தாக்க முற்பட்ட வேளை அதனை தடுக்க முற்பட்ட எமது வடமராட்சிக் கிழக்கு பிரஜைகள் குழுப் பொருளாளரும் சமூக செயற்பாட்டாளருமாகிய செல்வராசா உதயசிவம் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் அதே பேருந்தில் பயணித்த பயணிகளால் மீட்கப்பட்டு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அன்றிரவே மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்தும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்செயலை எமது வடமராட்சிக்கிழக்கு பிரஜைகள் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன் தனியார் பேருந்து நடத்துநர் தாக்கப்பட்டமை, பேருந்தை மறிந்து போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமை என்பனவற்றையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் குற்றமிழைத்தவர்களை உரிய தரப்புக்கள் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி இயல்புநிலை ஏற்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்எனவடமராட்சிக் கிழக்கு பிரஜைகள் குழு விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 708

Search for people, places and things Nagendram Home

கதிர் சஜி

சார் சார் என் பொண்டாட்டிய காணோம் சார்

யோ இது போஸ்ட் ஆபீஸ் யா

அய்யயோ சந்தோஷத்துல எங்க போறதுனே தெரியலையே

றொகான்

குருநாதா இதுக்குமேல தாங்கமுடியாது குருநாதா......... வெயில் ஓவரா அடிக்குது




தனு

துவைத்து போட்ட துணியெல்லாம், ஒரு மணி நேரத்தில காய்ஞ்சிருது..!!




குளிச்சிட்டு போட்ட சட்டை, ஒரு மணி நேரத்தில நனைஞ்சிருது..!! முடியல..!!

அழகேஸ் மீனு



தர்மசிலன்



மது



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

151

## சமூகப் படங்களுக்கு எம்.ஜி.ஆரை திருப்பிய "திருடாதே"

நான் முன்னமே இந்திப் படமான பாக்கெட் மார் என்னும் கதையை தேர்ந்தெடுத்து வைத்திருந்தேன். ஆகவே அப்படத்தைப் போட்டு எம்.ஜி.ஆருக்குக் காண்பித்தேன்.

அவருக்கு அந்தக் கதை மிகவும் பிடித்திருந்தது. சரி, இந்தக் கதையையே எடுக்கலாம். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று சொன்னார்.

மறுநாள் சியாமளா ஸ்டூடியோ மேக் அப் அறையில் எம்.ஜி.ஆர் மேக்கப் போட்டுக் கொ,ண்டிருக்கும்போது நானும் எனது கூட்டாளியான வி.அருணாசலம் செட்டியாரும், சென்று சாவித்திரி பிக்சர்ஸ் என்ற பெயரில் ஒரு கப்பெனி தொடங்கியிருக்கிறோம். அதன் மூலம் தாங்கள் நடிக்கும் படத்தை எடுக்க முடிவு செய்திருக்கிறோம் என்று சொன்னோம்.

எம்.ஜி.ஆர் மகிழ்ச்சியடைந்து மிகவும் குறைந்த சம்பளத்தில் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டார். எனக்கு படங்கள் அதிகமிருக்கிறபடியால் ஆறு மாதத்திற்கு அவைகளுக்கெல்லாம் கால்ஷீட் கொடுத்து விட்டேன். ஆனால் கால்ஷீட் நேரம் பூராவும் காலை 9 மணியிலிருந்து மாலை 5மணி வரைதான் கொடுத்திருக்கிறேன். அதனால் தினமும் மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை தினமும் சூட்டிங் நடத்தினால் படத்தைச் சீக்கிரம் முடிக்கலாம். அதற்கு தகுந்தாற்போல நடிகர்- நடிகைகளை போட வேண்டும். குறிப்பாக கதாநாயகியை புதுமுகமாகப் போட்டால்தான் நம் சௌகரியம் போல் சூட்டிங் நடத்தலாம் என்று சொன்னார்.

### தங்கமலை ரகசியம்

நான் அப்போது பி.ஆர். பந்துலுவின் பத்மினி பிக்சர்ஸ் கம்பெனியில் தங்கமலை ரகசியம் என்ற திரைப்பட தயாரிப்பில் ஈடுபட்டிருந்தேன். தங்கமலை ரகசியம் எனது கதையாதலால் என்னை பந்துலு தன் கூடவே வைத்துக் கொண்டிருந்தார்.




ஒருநாள் சென்னை கடற்கரையில் தனிமையாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு டைரக்டர் கே.சுப்ரமணியத்தின் புதல்வி பத்மா சுப்ரமணியம் (பரதநாட்டியக் கலைஞர்) வந்தார். அவர் கூடவே ஒரு பெண்ணும் வந்தாள்.

என்னைக் கண்டதும் பத்மா அங்கேயே உட்கார்ந்தார். பல விடயங்களைப் பற்றி பேசிக் கொண்டு வரும்போது நான் தங்கமலை ரகசியம் என்ற திரைப்படத்துக்கு கதை எழுதியிருப்பதையும் அதில் வேலை செய்து வருவதையும் சொன்னேன்.

உடனே பத்மா, இந்தப் பெண் பெங்களூரைச் சேர்ந்தவள். தாய்மொழி கன்னடம். கன்னடப் படத்திலும் நடித்திருக்கிறாள். தமிழ்ப் படத்திலும் நடிக்க வேண்டுமென்பது ஆசை. ஏதாவது தமிழ்ப் படத்தில் ஒரு சிறு சான்ஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுங்க என்று கேட்டுக்கொண்டார்.

தங்கமலை ரகசியம் படத்தில் அழகு மோகினி யவ்வன (இளமை) மோகினி என்று இரண்டு பெண்கள் நடனமாடும் காட்சி வருகிறது. அதில் ஒரு நடனமணியாகப் போடலாம். நான் பந்துலு அவர்களிடம் சொல்கிறேன் என்று சொன்னேன்.

# மகிந்தவின் முகத்தில் அறைந்த சீனா



தனிப்பட்ட ஆட்சியாளர்களை அடிப்படையாகக் கொண்டல்லாது தனது வெளியுறவுக் கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கைக்கான உதவிகள் வழங்கப்படும் என்ற சீன ஜனாதிபதியின் இந்தக் கூற்றானது மகிந்தவை இலக்காகக் கொண்டதா அல்லது இல்லையா என்பது தெரியாது. எனினும், சீனா இன்னமும் தனது கைக்குள் உள்ளது என சூளுரைத்த மகிந்தவின் கொட்டத்தை அடக்குவதற்காகவே சீன ஜனாதிபதி இவ்வாறானதொரு அறிவித்தலை விடுத்ததாக சிலர் கூறுகின்றனர.

இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.

தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளை அடுத்து மகிந்த ராஜபக்ஷ தாய்லாந்திற்கான தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். தேர்தல்களில் அடுத்தடுத்து தோல்வியைச் சந்தித்த பின்னர் முதன்முதலாக சீனாவிற்கான பயணத்தை மேற்கொள்ளவே மகிந்த திட்டமிட்டிருந்தார். இதற்கான திகதியையும் இவர் தேர்வு செய்திருந்தார்.

ஆனால் சீனாவிற்கான தனது சுற்றுலாப் பயணத்திற்கான அழைப்பை மகிந்த ராஜபக்ஷ சீனாவிடமிருந்து பெறவில்லை. இதனாலேயே இவரது சீனப் பயணம் இரத்துச் செய்யப்பட்டது. தேர்தலில் தோல்வியடைந்தது தொடக்கம், சீனாவிடம் உதவியைப் பெறாது இலங்கைக்கான அபிவிருத்தி சாத்தியமற்றது என மகிந்த பரப்புரை செய்தார். தன்னால் மட்டுமே சீனாவின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மகிந்த சூளுரைத்தார்.

மைத்திரி-ரணில் அரசாங்கத்தால் சீனாவின் மனதை வெல்ல முடியாது எனவும் இதனால் சீனாவின் உதவியின்றி இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாது எனவும் மகிந்த சுட்டிக்காட்டினார். எனினும், ரணிலின் சீனாவிற்கான அண்மைய பயணத்தின் போது, சீனா எந்தவொரு தனிப்பட்ட ஆட்சியாளர்களையும் அடிப்படையாகக் கொண்டல்லாது தனது வெளியுறவுக் கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கைக்கான உதவிகள் வழங்கப்படும் என சீன ஜனாதிபதி வாக்குறுதி வழங்கினார்.

சீன ஜனாதிபதியின் இந்தக் கூற்றானது மகிந்தவை இலக்காகக் கொண்டதா அல்லது இல்லையா என்பது எமக்குத் தெரியாது. எனினும், சீனா இன்ன மும் தனது கைக்குள் உள்ளது என சூளுரைத்த மகிந்தவின் கொட்டத்தை அடக்குவதற்காகவே சீன ஜனாதிபதி இவ்வாறான தொரு அறிவித்தலை விடுத்ததாக சிலர் கூறுகின்றனர். இலங்கை வாழ் மக்களுக்கு உதவும் சீனாவின் ஜனாதிபதி இவ்வாறான தொரு செய்தியைத் தெரிவிக்க விரும்பியிருக்கலாம். அத்துடன் ராஜபக்ஷாக்களுடன் மட்டுமே சீனா நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது என்கின்ற மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்குள் நிலவும் எண்ணப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்கான ஒரு செய்தியாகவும் இது அமைந்துள்ளது.

மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவானது ஹொங் கொங்கைத் தளமாகக் கொண்டு செயற்படும் பி.ஆர் நிறுவனத்தாலேயே நெருக்கமாக்கப்பட்டது என்கின்ற கருத்து நிலவினாலும் கூட, இதில் முக்கிய பங்கு வகித்தவர் சிங்கப்பூரைச் சேர்ந்த பொருளியல் வல்லுனர் ஒருவரே எனக் கூறப்படுகிறது. ரணில் பிரதமராகப் பதவியேற்ற போது சிங்கப்பூரைச் சேர்ந்த பொருளியல் வல்லுனர்களின் ஆலோசனைகளைப் பெறுவ்தெனத் தீர்மானித்தார். இவர் தனது மாமாவான ஜே.ஆரின் கோட்பாடுகளைப் பின்பற்ற விரும்பினார்.

1977இல் ஜே.ஆர் இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு, அப்போதைய சிங்கப்பூர் பிரதமர் லீ குவன் யூவின் ஆலோசனையைப் பெற்றார். இலங்கை தன்னிடம் பெற்றுக்கொண்ட ஆலோசனை தொடர்பாக லீ குவன் யூ தனது நூலான 'மூன்றாம் உலகிலிருந்து முதலாவது வரை' என்பதில் குறிப்பிட்டுள்ளார். இவர் இந்த நூலில் 1977 தொடக்கம் இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜே.ஆருக்கு தான் வழங்கிய ஆலோசனைகள் தொடர்பாக விளக்கியுள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன கத்தோலிக்கராகப் பிறந்து பின்னர் பௌத்தத்திற்கு மாறிய ஒருவர் எனவும், இவர் இலங்கையை சோசலிசக் கோட்பாடுகளிலிருந்து மாற்றிய ஒருவர் எனவும் இவரது நடைமுறை அணுகுமுறையானது 1978 ஏப்ரலில் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்வதற்கு உந்துசக்தியாக இருந்ததாகவும் சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவன் யூ தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், விமான சேவைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு ஜே.ஆர் அவசரப்பட்ட போது அது அவ்வளவு முக்கியமானதல்ல என லீ ஆலோசனை வழங்கியிருந்தார். ஏனெனில் இத்தகைய திட்டத்திற்கு மிகவும் திறமை வாய்ந்த சிறந்த நிர்வாகிகள் தேவை எனவும் ஆனால் இவர்களது உதவிகள் இலங்கையின் நீர்ப்பாசன, விவசாய, வீடமைப்பு, தொழிற்றுறை போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று என்பதால் இத் திட்டத்தை முன்னுரிமைப்படுத்த வேண்டாம் எனவும் லீ ஆலோசனை வழங்கியிருந்தார்.

(தொடரும்)

# சுற்றுலா

பயணம் எல்லைகளை கடந்தது. ஒருவனுக்கு மிகப் பெரிய அனுபவம் கிடைப்பது அவன் மேற்கொள்ளும் பயணத்தின் மூலமாகத்தான் என்று கூறுவார்கள். கொலம்ப்ஸ் முதல் காந்தி வரை பயணத்தின் மூலமே மேன்மை அடைந்துள்ளார்கள்.

பல்வேறு பகுதிகள் அதன் தட்ப வெப்ப நிலை, கலாச்சாரம், அப்பகுதியில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள் என சுற்றுலாவில் நிறைய கற்றுக்கொள்ள முடியும். இன்று இருக்கக்கூடிய மன அழுத்தம் நிறைந்த வாழ்க்கையில் இதுபோன்ற சுற்றுலா மட்டுமே நம்மை மனிதத்தோடும் உயிர்ப்போடும் வைத்திருக்கிறது. சுற்றுலா நமக்கு புதிய அனுபவத்தை தருவதோடு நாட்டின் பொருளாதார உயர்வுக்கும் காரணமாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகில் மிக அதிகம் செல்வாகக்கூடிய சுற்றுலா பகுதி நோர்வே நாட்டில் உள்ள ஒஸ்லோ. இங்கு ஒரு இரவு தங்குவதற்கு மட்டும் 169 அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது. சர்வதேச அளவில் சுற்றுலாவுக்கு அதிகம் செலவாகக்கூடிய நாடு சுவிட்ஸர்லாந்து. இரண்டாவது இடத்தில் இங்கிலாந்து உள்ளது. மூன்றாவது இடத்தில் பிரான்ஸ் உள்ளது. உலகிலேயே அதிக மக்கள் சுற்றுலா செல்லும் நாடாகவும் பிரான்ஸ் விளங்குகிறது.

இந்திய மற்றும் சீன சுற்றுலா பயணிகளே இலங்கைக்கு அதிகம் சுற்றுலா வருகின்றனர்.

தி அல்கெமிஸ்ட், டர்கெஸ்தான் சோலோ, சேகுவேராவின் தி மோட்டார் சைக்கிள் டைரிஸ் போன்ற நூல்கள் மிக பிரபலமானவை.

வெளிநாட்டு சுற்றுலா செல்ல ஆசைப்படுபவர்கள் மாலைதீவுகள், டுபாய், வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு குறைந்த செலவில் செல்லமுடியும். சரியான திட்டமிடல் இருந்தால் இரண்டு நபர்கள் குறைந்தது 2 இலட்ச ரூபாயில் இந்த நாடுகளில் ஏதேனும் ஒரு நாட்டிற்கு சுற்றுலா செல்ல முடியும்.

பயணம் செய்வதையே வாழ்க்கையாக்கி உலகையே சுற்றி வந்தவர்கள் ஏராளம். 'பயண விரும்பி (Traveller) என்று சொல்லக்கூடியவர்கள் மலைகள், காடுகள், கடல் பயணம் என பல வழிகளில் உலகை சுற்றி வந்து கொண்டிருக்கின்றனர். பயணத்தின் போதே ஒன்லைன் பிஸினெஸ், பத்திரிகைகளுக்கு எழுதுவது போன்ற வேலைகளை செய்து தங்களது பொருளாதார தேவையையும் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

சர்வதேச அளவில் பயண நூல்கள் அதிக அளவு விற்பனையை கண்டு வருகின்றன. ஒரு மனிதன் இறப்பதற்குள் பார்க்க வேண்டிய ஆயிரம் இடங்கள் பற்றிய ஒரு புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இந்த புத்தகம் சுற்றுலா பயணத்தை விரும்புகிற ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம்.




மொத்தம் 284 மில்லியன் வேலை வாய்ப்புகள் சுற்றுலாத் துறையில் உள்ளன.

பொருட்கள்வாங்குவதை விட சுற்றுலாவிற்கு பணத்தை செலவழிக்கும்போது அதிக மன நிம்மதி அடைவதாக ஆய்வு கூறுகிறது.

ஆசியா கண்டத்திலேயே சுற்றுலாத் துறையில் முன்னணியில் உள்ள நாடு சீனா. இந்தியா 5-வது இடத்தில் உள்ளது.

2013-ம் ஆண்டு தகவலின் படி அதிக பயணிகள் பார்வையிடும் நகரம் தாய்லாந்து நாட்டில் உள்ள பாங்காக்.

உலகின் மொத்த ஜிடிபியில் சுற்றுலாத்துறையின் பங்கு 9.8%

2015-ம் ஆண்டு மொத்த ஜிடிபியில் சுற்றுலாத் துறையின் பங்கு 6.3 சத வீதம்

இது 2014-ம் ஆண்டு 7.5 சத வீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை சுற்றுலாத்துறை லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை வழங்குகிறது.

2015-ம் ஆண்டு இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மட்டும் 1.5 மில்லியன் பேர்.

இலங்கையில் வில் மிகப் பிரபலமான சுற்றுலா தலங்களாக சிகிரியா, யால, கண்டி, கொழும்பு, நுவரெலியா, யாழ்ப்பாணம் ஆகியன அதிக வெளிநாட்டு பயணிகள் பார்வையிடும் இடங்களாகும்.

இதேபோல் இந்தியாவின் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்தவர் ஐஏஎஸ் அதிகாரி அமிதாப் காந்த். இது கடவுள்களின் நாடு (Gods Own Country) என்ற வாசகத்தை கொண்டு வந்து கேரளா சுற்றுலாத்துறையை மேம்படுத்தியவர். இந்தியாவின் சுற்றுலாத் துறைக்கு இன்கிரிடிபிள் இந்தியா என்ற வாசகத்தை உருவாக்கினார். இதன் மூலம் இந்தியாவின் கலை, கலாச்சாரம், கிராமப்புற இந்தியா என பல்வேறு கோணங்களில் இந்தியாவின் அழகை உலக மக்களுக்கு காண்பித்தவர். இந்த வாசகத்துக்கு பிறகுதான் இந்தியாவின் சுற்றுலாத் துறை மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைந்தது. இவ்வாறான செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்ள வேண்டும்.

2016இல் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் நோக்கில் இலங்கை சுற்றுலாச்சபை செயற்பட்டு வருகிறது.




## சமுர்த்தி, மூத்த பிரஜைகளுக்கு சலுகை விலையில் ஸ்மார்ட் போன்

Sri Lanka Telecom Mobitel

ஸ்ரீலங்கா ரெலிகொம் மொபிடெல் நிறுவனமானது தற்பொழுது அரச ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் மூத்த பிரஜைகளுக்கு மாதாந்த கட்டண அடிப்படையில் ஸ்மார்ட் போன்கள் மற்றும் மொபிடெல் பெக்கேஜ்களை வழங்க முன்வந்துள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டமானது தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பு தொடர்பான அமைச்சின் எண்ணக்கரு வின் அடிப்படையில் அமைச்சர் ஹரிண் பெர்ணடோவின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படுவதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் நவீன தொழில்நுட்ப வசதிகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு உந்து சக்தியாக இச்செயற்றிட்டம் அமைந்துள்ளது

இச்செயற்றிட்டத்தின் கீழ் அரச ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் மூத்த பிரஜைகளுக்கு மாதாந்த கட்டண அடிப்படையில் ஸ்மார்ட் போன்கள் மற்றும் மொபிடெல் பெக்கேஜ்கள் வழங்கப்படும். அத்துடன் அரச ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஸ்மார்ட் போன்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியுள்ளமை விசேட அம்சமாகும்.

மொபிடெல் நிறுவனம் கடந்த 2008 ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு "மொபிடெல் உபஹார" சேவையினை அறிமுகப்படுத்தி நாட்டின் தொடர்பாடல் துறையில் மிகப் பெரியதோர் புரட்சியினை ஏற்படுத்தியிருந்தமை நாம் யாவரும் அறிந்ததே. 2012-ம்ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட "மொபிடெல் உபஹார ப்ரோப்பான்" சேவையின் மூலம் அரச ஊழியர்களுக்கு மிக சிறந்த சேவையினை வழங்கியிருந்ததுடன் தற்பொழுது மேம்படுத்தப்பட்ட மிகச் சிறந்த சேவையினை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கையடக்கத் தொலைபேசிகளானவை அதனை தயாரித்து விநியோகம் செய்யும் நிறுவனத்தின் உத்தரவாதத்தினை கொண்டிருக்கும். தேசிய அடையாள அட்டை மற்றும் ஏனைய ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆரம்பக்கட்ட பரிசீலனைகளின் பின்னர் மேற் குறித்த பிரிவினைச் சேர்ந்த நபர்களுக்கு ஸ்மார்ட் போன்கள் அல்லது நவீன தொழில் நுட்பத்துடனான கையடக்கத் தொலைபேசியுடன் மொபிடெல் பிற்கொடுப்பனவு பொதியொன்றும் வழங்கப்படும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,422.65 | 6,516.26 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,395.84 | 3,435.55⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,658.409 |

**உயர்வுற்றபங்குகள்(ரூ)** எஸ்எம்பி லீசிங்(x)(0.30), பரஹன்(69.50), லக்கி லங்கா (x) (2.70), திறி ஏக்கர் பாம்(122.80), லங்கா சீமெண்ட்(7.10).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ஈஸ்ட் வெஸ்ட்(15.50), சிஐஎப்எல்(0.60), இன்டஸ்ரியல் அஸ்ப்(300.20), ரம்பொட போல்ஸ்(24.90), ஈசனலிங்(10.50).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## உன்னால் முடியும்: பெருநிறுவன வாழ்க்கையில் திருப்தியில்லை



இந்தியாவின் மிகச் சிறந்த மேலாண்மை கல்வி நிறுவனமான ஐஐஎம் அகமதாபாத் நிறுவனத்தில் படித்து டெல்லியில் பணியாற்றிக் கொண்டிருந்தவர் மதுசூதனன். "தொழில் ஆலோசகர், வென்ச்சர் கேபிடல் நிறுவன பணி என பரபரப்பான வாழ்க்கை முறை மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. ஏதோ ஒன்றை இழந்ததுபோல இருக்கும். அதனால்தான் அந்த வாழ்க்கையைத் தொடரவில்லை. அதிலிருந்து வெளியேறி சின்னதாக தொடங்கிய சொந்த தொழில்தான் ``தானியம்" இயற்கை பொருட்கள் விற்பனை மையம்" என உற்சாகமாக பேச ஆரம்பித்தார். அவரது அனுபவம் இந்த வாரம் இடம் பெறுகிறது.

சொந்த ஊர் கல்பாக்கம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் பிடெக் பட்டமும், அகமதாபாத் ஐஐஎம் நிறுவனத்தில் உயர் கல்வியும் முடித்துவிட்டு டெல்லியில் தொழில் ஆலோசகராக இருந்தேன். பிறகு ஒரு வென்ச்சர் முதலீட்டு நிறுவனத்தில் பணியாற்றினேன். பரபரப்பான வாழ்க்கை முறையில் நின்று நிதானமாக ஒரு வேளை உணவுகூட சாப்பிட முடியாது. நல்ல வருமானம் இருந்தாலும், என்னடா வாழ்க்கை என்று தோன்றும். 2 ஆண்டுகள் இந்த பணியில் இருந்தேன். இந்த வேலைகளை விட்டுவிட்டு அமைதியாக ஒரு வாழ்க்கை வாழலாம் என்று யோசித்தேன். நல்ல உணவு, சுத்தமான காற்று, ஆரோக்கியமான வாழ்க்கை இது போதும் வாழ்க்கையை சந்தோஷமாக வாழலாம் என்பது எனது எண்ணம். இதற்கு ஏற்ப நமது தேவை களுக்கும் வருமானத்துக்கு சிறியதாக ஒரு தொழில் ஆரம்பித்துக் கொண்டு ஊருக்கே சென்றுவிடலாம் என்று திட்டமிட்டேன். செய்கிற வேலை சமுதாயத்துக்கும் பயன்பட வேண்டும், நமக்கு குறைந்த லாபத்தைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது தொழில் திட்டம்.

இப்படி திட்டமிடுகிறபோதே ஓர்கானிக் பொருட்கள் விற்பனை என்கிற எண்ணம் வந்தது. ஏனென்றால் நான் அதுகுறித்து எழுந்த ஆர்வத்தால் அவ்வப்போது பல தகவல்களையும் சேகரித்து வைத்திருந்தேன். மனைவியிடம் யோசனையை சொனனதும் அவருக்கும் முழு ஈடுபாடு. இதற்கான முதல் நாள் திட்டமிடலில் இருந்தே அவரும் என்னுடன் பயணித்தது எனக்கு மிகப்பெரிய பலம்.

எந்த தொழிலாக இருந்தாலும் தெளிவான நிர்வாக திறமையும் இலக்கும் வேண்டும். அதை எனது கல்வி கொடுத்தது. ஆனால் ஓர்கானிக் குறித்த அனுபவத்தை தேடித் தேடித்தான் தெரிந்து கொண்டேன். அதை அனுபவம்தான் கொடுத்தது. நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் சென்னையில் முதன் முதலில் 2010ல் ஆர்கானிக் பொருட்களை விற்பனை செய்யும் கடையை தி. நகரில் தொடங்கினோம். முதல் 2 ஆண்டுகள் பெரிய அளவில் வரவேற்பு இல்லை. ஆனாலும் இதற்கான உழைப்பை விடவில்லை. ஓர்கானிக் பொருட்கள் உற்பத்தி செய்பவர்கள், விவசாயிகள் என நேரடியாக சென்று கொள்முதல் செய்வது, அறிந்து கொள்வது என தின்சரி வேலைகள் செய்து கொண்டே இருப்பேன். 2 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்த வர வேற்பையடுத்து அண்ணா நகர் அடையாறுஎனகிளைகளைதிறந்தோம்

சுப்பர் மார்க்கெட்டில் கிடைக்கும் அத்தனை பொருட்களும் ஓர்கானிக் பொருட்களிலும் கிடைக்கும். ஆனால் செயற்கை உரங்கள் கொண்டு விளைவிப்பதை கொடுப்பதில்லை. 100 வீதம் ஓர்கானிக் என்பதை உறு தியாகக் கடைப்பிடிக்கிறோம்

தற்போது நிரந்தரமாக 20 நபர்களுக்கு வேலை வாய்ப்பு இதன் மூலம் உருவாகியுள்ளது.

சம்பளம் வாங்கியபோது கிடைக்காத திருப்தி இப்போது நல்ல பொருட்களை மக்களுக்கு கொடுக்கிறபோது கிடைக்கிறது. அதே சமயத்தில் நான் வேலையில் இருந்திருந்தால் என்ன சம்பளம் கிடைக்குமோ, அதே அளவு வருமானமும் கிடைக்கிறது. இதைவிட எனக்கு வேறென்ன மகிழ்ச்சி வேண்டும் என்றார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.60 | 147.42 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 209.73 | 217.17 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.60 | 169.09 |
| சுவிஸ் பிராங் | 148.06 | 154.24 |
| கனேடிய டொலர் | 113.94 | 118.69 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.81 | 113.90 |
| சிங்கப்பூர் டொலர் | 106.65 | 110.72 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்பட்டு வரும் வர்த்தக திணைக்களத்தில் உதவி வர்த்தகப் பணிப்பாளர் பதவிக்காக தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விசார் தகைமைகள் (I) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து. அல்லது பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பொருளாதாரம், வர்த்தகம், வியாபார முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், புள்ளிவிபரவியல், கணக்கியல் அல்லது பொது நிர்வாகம் அல்லது முகாமைத்துவத்தில் விசேட பட்டத்தில் (சிறப்பு) முதலாம் வகுப்பு அல்லது இடண்டாம் வகுப்பில் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(II) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பொருளதாரம், வர்த்தகத்தில் சாதாரண பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(III) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சட்டத்துறையில் பட்டப்படிப்பினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் போது (2016-05-20) 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.மேலதிக தகவல்களுக்கு 29-04-2016 இல் வெளியான வர்த்தமானியை பார்வையிடவும். (இ

## முன்னாள் போராளிகளை கைது செய்யும்போது சர்வதேச நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும்

### சமாதான பேரவை வலியுறுத்து

வடக்கு கிழக்கில் முன்னால் விடுதலைப்புலிகள் கைது செய்யப்படுவது தொடர்பில் பதற்ற நிலை தோன்றியுள்ளதாக தேசிய சமாதான பேரவை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் மீண்டும் ஒன்று சேர்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கைதுகள் இடம்பெறும் போது உரிய சர்வதேச நியமங்களும் நடைமுறைகளும் பின்பற்றப்பட வேண்டும் என பேரவை கோரியுள்ளது.

ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது உரிய நடை முறைகள் பின்பற்றப்படாமை காரணமாக நாட்டின் செல்வாக்கில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே தற்போது நாட்டுக்கு தேவையான நல்லிணக்கத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் உரிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

இதேவேளை வடக்கு கிழக்கு மக்கள் விடுதலைப்புலிகளுடன் இணையாமல் இருக்கக்கூடிய பொறுப்பை தமிழ் மக்களின் பிரதிநிதி களாகிய தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு உரிய வகையில் செய ற்படுத்த வேண்டும் என்றும் தேசிய சமாதான பேரவை கோரியுள்ளது. (இ-5)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 45 | 40 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 65 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 60 | 90 | 50 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 45 | 50 | 50 |
| கோவா | 80 | 70 | 80 | 70 |
| கரட் | 80 | 70 | 80 | 80 |
| பூசணி | 30 | 15 | 50 | 40 |
| புடோல் | 60 | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 35 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | — | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 130 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 70 | 80 |
| கறிமிளகாய் | 120 | 50 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 250 |
| போஞ்சி | 180 | 100 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 25 | — | 70 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 15-35 | 35 | 40 |
| இராசவள்ளி | 140 | 100 | 140 | 150 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 40 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை கடற்படையின் 2 போர்க்கப்பல்கள் குண்டு வைத்து தகர்ப்பு 170

கடற்படை கப்பல் மீது தாக்குதல் நடந்த விடுதலைப் புலிகள் 2 படகுகளில் வந்தனர். இந்த இரு படகுகளிலும் 5 விடுதலைப் புலிகள் இருந்தனர். இவர்களில் 2 பேர் பெண்கள். இவர்கள் அனைவரும் தற்கொலைப் படை பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் குறித்து தகவல் ஒலிபரப் புத்துறை மந்திரி தர்மசிறி சேனநாயகா கூறியதாவது,

### கவலை

விடுதலைப் புலிகளை முந்தைய அரசு தீவிரவாதிகள் என்று கூறி வந்தது. எங்களைப் பொறுத்த வரை அரசு அப்படி சொல்லாது அவர்களை வழி தவறிச் செல்லும் இளைஞர்கள் என்று சொல்லாம்.

வடக்கு மன்னார் கடற்கரைப் பகுதியில் கப்பல் மீது விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையினர் தாக்குதல் நடத்தியதில் 2 அதிகாரிகள் மற்றும் 22 மாலுமிகள் பலியானார்கள். தாக்குதல் நடத்திய பெண் விடுதலைப்புலி நளாயினி உட்பட 5 பேர் உயிர் இழந் தனர்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் கவலை அளிப்பதாக உள்ளது. அரசு மேலும் சில சலுகைகளை அறிவிக்க இருந்த இந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக இந்த சம்பவம் நடந்து இருக்கிறது.

### சமரச முயற்சி

இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினாலும் சமரச முயற்சி தொடரும்.

தற்போது ஏற்பட்டுள்ள புதிய அரசு தமிழர்களின் பிரச்சினையை நல்ல முறையில் தெரிந்து வைத்துள்ளது. இதற்கு அரசியல் மூலம் தீர்வு காணவே அரசு விரும்புகிறது. எனவே சமரசப்பேச்சு நடத்துவது அவசியம் ஆகும்.

### அதிகாரிகள்

முதலில் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடைபெறும். இதற்காக விடுதலைப்புலி தலைவர் பிரபாகரன் சிபாரிசு செய்த 4 பேர் குறித்து அரசு பரீசீலனை செய்து வருகிறது. இவ்வாறு இலங்கை மந்திரி தர்மசிறி சேனா நாயகா கூறினார்.

### பேச்சுவார்த்தை

இந்த நிலையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 4 பேர் கொண்ட உயர் மட்ட குழுவைச் சந்திரிகா அமைத்தார்.

ஏற்கனவே விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் பிரிவின் தலைவர் கே.கரிகாலன் உட்பட 4 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவினர் 13.10.1994 அன்று பேச்சு வார்த்தை நடத்த இருந்தனர்.

பேச்சு வார்த்தை நடைபெறுவதற்கு 4 நாட்கள் இருந்த நிலையில் விடுதலைப் புலிகள் மேலும் தாக்குதலை நடத்தினார்கள்.

### சரக்குக் கப்பல்

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள அரச அதிகாரிகளுக்கு உணவு ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பல் ஒன்று வெற்றிலைக்கேணி பகுதியில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சரக்குக் கப்பலை 09.04.1994 அன்று அதிகாலை 4.30 மணிக்கு விடுதலைப் புலிகள் குண்டு வைத்து தகர்த்தனர்.

இதனால் சரக்குக் கப்பல் கடலில் மூழ்கியது. இதில் இருந்த 16 சிப்பந்திகளும் கப்பல் மூழ்குவதற்கு முன்பு கடலில் இருந்து தப்பி விட்டனர்.

இந்தச் சரக்குக் கப்பல் 1400 தொன் எடை கொண்டது. இந்தக் கப்பலைக் கொழும்பில் உள்ள குல்லில் மெரைன் நிறுவனத்தினர் இயக்கி வந்தனர்.

இந்தக்கப்பலை அரசின் மறுவாழ்வுத்துறை வாடகைக்கு அமர்த்தி இருந்தது.

இந்தச் சரக்குக் கப்பலைப் போர்க்கப்பல் என்று கருதி விடுதலைப்புலிகள் தகர்த்துள்ளனர் என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.


சந்திரிகாவுக்கும் பிரபாகரனுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்றதைத் தொடர்ந்து சமரசப் பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டது.

சந்திரிகாவின் செயலாளர் கே.பாலபட்ட பெந்தி தலைமையில் மூத்த அரச அதிகாரி லயனல் பெர்ணாண்டோ, இலங்கை வங்கித் தலைவர் ஆர்.ஆசிர்வாதம், சந்திரிகாவின் நண்பரும் கட்டிடக் கலைஞருமான என்.எல்.குணரத்னா ஆகியோரைக் கொண்ட குழுவை விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சந்திரிகா அமைத்திருந்தார்.

### யாழ்ப்பாணத்தில் சமரசப் பேச்சு

இந்தக் குழுவினர் 13.10.1994 அன்று காலை கொழும்பில் இருந்து இராணுவ விமானத்தில் புறப்பட்டு பலாலி விமானத் தளத்தில் இறங்கினார்கள். பின்னர் அங்கிருந்து காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம் வருவதற்கு சற்று முன்பு 28 பொருட்களை கொண்டு வருவதற்கான தடை நீக்கப்பட்டதைக் குறிப்பிட்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆயிரக்கணக்கான துண்டு பிரசுரங்கள் யாழ்ப்பாணம் முழுவதும் ஹெலிகப்டர்கள் மூலம் போடப்பட்டன.



(தொடரும்)

ஊர் இரண்டு பட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கொழும்பு துறைமுக நகரத்திட்டம்; இலங்கை - சீனா விரைவில் உடன்பாடு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக, சீன முதலீட்டாளருக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும இடையிலான சலுகை உடன்பாடு விரைவில் கையெழுத்திடப்படும் என்று, பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர் நிகால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் கொழும்பு வரவுள்ள சீன நிறுவன பிரதிநிதிகள் இந்த உடன்பாடு தொடர்பான இறுதி முடிவை எடுப்பார்கள் என்றும், பல மாதங்களாக நீடிக்கும் பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து உடன்பாட்டில் கையெழுத்திடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கமும், சீன முதலீட்டாளரும், கூட்டு முயற்சி ஒன்றை உருவாக்கி, கடலில் இருந்து மீட்கப்படும் நிலத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும், அதனை எதிர்கால வணிகத்துக்குப் பயன்படுத்துவது தொடர்பாகவும் இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கை அரசுக்கும், சீன முதலீட்டாளருக்கும் இடையில் ஏற்கெனவே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்தின்படியே இந்த பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த யோசனைக்கு சீன முதலீட்டாளரும் இணங்கியுள்ளார். எனினும், சீன முதலீட்டாளருக்கு 99 ஆண்டு குத்தகை அடிப்படையிலேயே நிலம் வழங்கப்படுமே தவிர, நில உரிமை வழங்கப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## கூட்டமைப்பை உடைக்கும் முயற்சி தமிழர் பலத்தைப் பாதிக்கும்

மே தினக் கொண்டாட்டங்கள் நாடு பூராகவும் நடந்துள்ளன. அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் , தொழிலாளர் அமைப்புக்கள் தத்தம் சார்புடைய உழைப்பாளர்களுடன் மே தினத்தை அனுஷ்டித்தனர்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மே தினத்தை இணுவில்-மருதனார்மடம் உள்ளிட்ட பிரதேசத்தில் நடத்தி முடித்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் மே தின நிகழ்வைக் கொண்டாடியது. அப்போது ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருக்கவில்லை.

இன்று ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருக்கின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் மே தின நிகழ்வை கொண்டாடுகின்ற நோக்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்திருக்கவில்லை.

இது ஒருபுறம் இருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின கூட்டம் இணுவில்-மருதனார் மடத்தை உள்ளடக்கிய பிரதேசத்தில் நடத்தப்பட்டதற்கான காரணம் என்ன?

யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கக் கூடிய வன்னி நிலப்பரப்பில் கூட்டமைப்பின் மே தினக்கூட்டத்தை பேரெழுச்சியுடன் நடத்தாதது எதற்காக? என்ற கேள்விகள் எழுந்துள்ள நிலையில்,

கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது அவரின் தந்தையார் தர்மலிங்கத்தின் தேர்தல் தொகுதியான இணுவில், மருதனார்மடம் உடுவில், சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளாகும்.

எனவே சித்தார்த்தனின் வாக்கு வங்கியை எதிர்காலத்தில் உடைக்கும் நோக்குடனேயே கூட்டமைப்பின் தலைமை, இணுவில்-மருதனார்மடம் உள்ளிட்ட பிரதேசத்தில் தனது மே தினக் கொண்டாட்டத்தை நடத்தியது எனவும் இதனாலேயே இம் மே தினக் கூட்டத்தில் சித்தார்த்தன் கலந்து கொள்ளவில்லை என்றும் கூறப்படுகின்றது. ஆக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக்காலப் போக்குகள் கூட்டமைப்பை உடைத்து தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துகின்றதாக இருப்பதைக் காணமுடிகின்றது.

தமிழ் மக்களின் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று நினைத்து தமிழ் மக்கள் வாக்களிக்க, அரசியல்வாதிகளோ தங்களின் எதிர்கால சுயநலத்தைக் கருத்தில் கொண்டு கூட்டமைப்பை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது தமிழ் மக்களுக்கு பேராபத்தாக அமையும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடத்துகின்ற மே தினம் என்றால், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் நிச்சயம் கலந்து கொண்டிருக்க வேண்டும்.

இது தவிர வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மே தின நிகழ்வில் முன்னுரிமை வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் இதைச் செய்யாமல் மே தின நிகழ்வை நடத்துவதென்பது பேரிழப்புகளைச் சந்தித்த தமிழினத்துக்கு கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய ஒரு சிலர் செய்கின்ற மிகப்பெரும் துரோகத்தனம் என்றே கூற வேண்டும்.

## கடலில் மூழ்கி ஒருவர் பலி

மாத்தறை மடிஹேற பிரதேசத்தில் கடலில் குளிக்க சென்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என மாத்தறை மடிஹேற பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வேறு சிலருடன் இணைந்து இந்த கடலில் குளிக்க சென்றிருந்த போதே இந்த அனர்த்தத்தில் சிக்கியுள்ளார் எனவும், ஹக்மனை பிரதேசத்தை சேர்ந்த 32 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில்மேலதிக விசாரணைகளை மடிஹேற பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-12)

## ஜீ.எஸ்.பி பிளஸ் விரைவில்

சில வாரங்களில் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைத திட்டம் கிடைக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். காலி சமனல மைதானத்தில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இது தொடர்பிலான தகவல்களை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இலங்கையில் மனித உரிமை பேணிப் பாதுகாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஜீஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை ரத்து செய் யப் பட் டிரு ந் த மை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## சுவாமி சின்மயானந்தரின் சிந்தனைத் துளிகள்



ஒரு மனிதனுக்கு மரியாதை செலுத்துவது என்பது அவனை அவனாகவே அங்கீகரித்துக் கொள்ளுதல் ஆகும். மரியாதை காட்டுவது என்பது அவன் வளர்ந்து தன்னாலேயே தனக்குத் தானே தன்னுள்ளேயே விரிவடைவதற்கு உதவுவதே ஆகும். பெற்றோர்கள் அவர்களின் குழந்தைகளை மதிக்க வேண்டும். ஆசிரியர்களும் அவர்கள் மாணவர்கள் மீது மதிப்புக் கொள்ள வேண்டும்.

## உலர் ஆமை இறைச்சியுடன் 7 சந்தேக நபர்கள் கைது

(திருகோணமலை)

திருகோணமலைகோட்டை பகுதியில் உலர்த்தப்பட்ட 120 கிலோகிராம் ஆமை இறைச்சி மற்றும் டொல்பின் மீன் கருவாடு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பை அடுத்து நேற்று முன்தினமிரவு 8.30 அளவில் இவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் சிலாபம் பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் திருகோணமலை துறைமுக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(செ-12)

## குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

**வினா இல.03**

**(அத்.2.ஸ்லோ.10)**

**மகாபாரதத்தில் அர்ஜுனன் போரிடத் தயாராக நிற்கின்ற காட்சி குறிக்கும் தத்துவம் என்ன?**

விடை:அர்ஜுனன்- ஜீவன்/ அகந்தை
ஐந்து குதிரைகள்-ஐம்புலன்கள்
இரதம்-உடல்
கடிவாளம்-மனம்
கிருஷ்ணர்-புத்தி
காண்டீபம்-செயல்

**வினா இல.04**

**(அத்.1 ஸ்லோ 1)**

**புனித நூல் ஸ்ரீமத் பகவத்கீதையில் பதினெட்டு அத்தியாயங்கள் உள்ளன. முதலாவது அத்தியாயத்தின் பெயர் என்ன?**

விடை: அர்ஜுன விஷாத யோகம்

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அலையின் தன்மை



நமது உடலுக்குள்ளாக இயங்கக் கூடிய உயிராற்றல், அலையாக ஜீவகாந்த சக்தியின் மூலம் எந்தப் பொருளோடு தொடர்பு கொண்டாலும், அந்தப் பொருளின் தன்மைக்கேற்ப மாற்றம் பெறும். நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, எப்பொழுதுமே, கோள்களிடமிருந்தும், பொருட்களிடமிருந்தும், மக்களிடமிருந்தும் அலைகள் வந்து கொண்டேயிருக்கும். அந்த அலைகள் சாதகமாகவும் இருக்கலாம், பாதகமாகவும் இருக்கலாம்.

பாதகம் என்பது வெளியிலிருந்து வரக்கூடிய ஆற்றல். நம்மிடையே இருக்கிற ஆற்றல் மீது அதிக அழுத்தம் தருமானால், அதைத் தாங்க முடியாதபோது ஒரு துன்பத்திற்குரியதாக மாறுகிறது. அதைத் தாங்கும் போது அதுவே இன்பமாக மாறுகிறது. நமக்கு எப்பொழுதுமே கோள்களிலிருந்து வ்ரக்கூடிய அலையினாலும், பொருட்களிலே இருந்து வரக்கூடிய அலையினாலும், நாம் செய்கின்ற செயல்களிலேயிருந்து வரக் கூடிய அலையினாலும், அதிகமாகப் பாதிக்கப்படாத ஒரு Steadiness தாங்கும் சக்தி (resistance power) அவசியம்.

அந்த ஆற்றலை ஏற்படுத்திக் கொள்வதற்காக நாம், நமது உடல், உயிர், ஜீவகாந்தம், மனம் இந்த நான்கையும் சேர்த்து ஒவ்வொரு பௌதீகப் பிரிவோடும் இணைக்க வேண்டும். உதாரணமாக, நிலம் என்ற மண்ணை எடுத்துக் கொண்டு அதையே நினைந்து, நினைந்து, நினைந்து மண்ணிலேயிருக்கக்கூடிய ஆற்றலுக்கும், நமக்கும் உறவை ஏற்படுத்தி, எப்போதும் நாம் தூங்கும்போதும், விழித்துக் கொண்டிருக்கும் போதும், எங்கே சென்றாலும் மண்ணிலிருக்கக் கூடிய ஆற்றல் நமக்கு உதவியாகத் தான் இருக்க வேண்டும். நன்மை தான் செய்ய வேண்டும் என்று சங்கற்பம் (Auto Suggestion) செய்து கொள்ள வேண்டும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில காரைநகர் சிவன் கோவில், கசூரினா கடற்கரை, மாப்பாணபுரி, இலகடி, சயம்புவீதி, மல்லிகை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில ஜெயபுரம், நாகபடுவான், குமுழமுனை, நாச்சிக்குடா, முழங்காவில், வேராவில், ஆனைவிழுந்தான், 651வது படைப்பிரிவு முகாம், 652வது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை I மற்றும் II, நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு பிரதேசம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வெளிக்குளம், கோவில் புதுக்குளம், சமணன்குளம், கூமரசங்குளம், ஆசிகுளம், தெற்கிலுப்பைக்குளம், கல்நாட்டினகுளம், எல்லப்பமருதங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## சித்திரை புத்தாண்டை முன்னிட்டு

# பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட போட்டி







சித்திரைப புத்தாண்டை முன்னிட்டு வவுனியா பண்டாரிக் குளம் பொலிஸ் பிரிவினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் கூமாங்குளம் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப் போட்டியானது பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட 6 அணிகள் கொண்ட போட்டியாக அமைந்தது.

இப் போட்டியில் சுப்பர் ஸ்ரார் A அணி முதலாம் இடத்தையும் சுப்பர் ஸ்ரார் B இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது

இதல் சிறந்த ஆட்ட வீரராக ஜெ.றுசாந்தன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (கு-28)

## இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் வரணி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விள்ளயாட்டுக் கழகம் மோதவுள்ளது.

+++

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் வி.க்கு மட்டும் நடத்தும் உதை பந்தாட்டப போட்டியில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில அராலி பாரதி அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் மற்றும் மாவட்ட ரீதியில் நடத்தும் போட்டியில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

+++

பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ள போட்டியில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.செபஸ்ரியான் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

## கலையொளி வி. கழக கரப்பந்தாட்ட முடிவுகள்

கலையொளி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலையொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த புதன்கிழமை மாலை 6.30மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத் தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் அணி மோதியது.இதில் வளர்மதி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம் பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதியது.இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி அணி மோதியது.

இதில் அச்சுவேலி கலைமகள் அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

## சென்.மேரிஸ் அணியை வென்றது செந்தமிழ் விளையாட்டுக்கழகம்

பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் செந்தமிழ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு)



## பாரதி வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

### உதய சூரியன் வெற்றி



பாரதி வி. கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் உதய சூரியன் வி.கழகம் மற்றும் கொக்கிளாய் சக்திவேல் வி.கழகம் ஆகியன மோதின. இதில் சிறப்பாக விளையாடிய உதயசூரியன் கழகத்தினர் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

உதய சூரியன் விளையாட்டுக் கழக வீரர் செந்தூரனினால் ஒரு கோல் அடிக்கப்பட்டது. (கு)

## தெல்லிப்பழை நாமகள் வி.க 7நபர் கொண்ட உதைபந்தாட்டம்

### யங்கம்பன்ஸ் வெற்றி



தெல்லிப்பழை நாமகள் வி.க நடத்தும் 7 நபர் கொண்ட உதை பந்தாட்டத் தொடரில் சுப்பர் 8 போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஞான முருகனை எதிர் கொண்ட யங்கம்பன்ஸ் முதல் பாதியாட்டம் தொடங்கி 10 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் வி.க வீரன் ரதன் ஒரு கோலைப்போட்டார்.

ஆட்டம் தொடர்ந்தது. பல தடவை கோல் வாய்ப்பு இருந்தும் அதை கைநழுவ விட யங்கம்பன்ஸ் முதல் பாதி 1:0 என நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் தன் ஆதிக்கத்தை வெளிப்படுத்தியது யங்கம்பன்ஸ். இரண்டாவது பாதியாட்டம் தொடங்கி 25 ஆவது நிமிடத்தில் நீண்ட தூரத்தில் இருந்து அற்புதமான கோலை போட்டார் இளம் வீரன் நிறோ. போட்டி முடிவின் கடைசி 39 ஆவது நிமிடத்தில் ஞான முருகன் தனது முதல் கோலைப் போட்டது. போட்டி முடிவில் யங்கம்பன்ஸ் வி.கழகம் 2:1 என்ற அடிப்படையில் வெற்றியீட்டியது. யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக ரதன், நிறோ தலா ஒரு கோலினை போட்டனர். (கு)

## திக்கம் இ. கழக உதைபந்தாட்டம்

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட லீக் சுற்றுப் போட்டியில் கடந்த வியாழன் நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் மற்றும் கொலின்ஸ் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டி 2-2 என்ற கோல்கணக்கில் சமனிலையில் முடிந்தது.

கொலின்ஸ்அணிசார்பாகவிஸ்னு ஒரு கோலையும் அனுசாந் ஒரு கோலினையும் போட்டனர். (கு)

## சம்பியனாகியது வீனஸ் அணி

பருத்தித்துறை இளைஞர் கழகங்களுக்கு இடையிலே நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுத்தொடரின் காலிறுதிப்போட்டியில் திருநாவலூர் அணியையும் அரையிறுதியில் சென். தோமஸ் அணியையும் இறுதிப் போட்டியில் விவேக்கின் அதிரடியாலும் சுதர்சனின் பந்து வீச்சின் வேகத்தாலும் உதயசூரியன் அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது பருத்தித்துறை வீனஸ் அணி. (கு)

## தமிழருக்கான...

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக சர்வதேச மாநாடு ஒன்று இந்த வருடம் நடை பெறவுள்ளது. இதில் எல்லோரும் இணைந்து எமது பிரதேச அபிவிருத்திக்காக நிபுணத்துவத்துடன் செயற்பட வேண்டும். இந்த நாட்டில் இறைமை பகிர்ந்தளிக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் இங்கு படுகொலைகள் இடம்பெற்று இருக்காது.

இறைமை என்பது மூன்று விடயங்கள். அதில், சட்டத்தையாக்கும் அதிகாரம், நிர்வாக அதிகாரம், நீதி அதிகாரம் எனப்படுகின்றன. இறைமையின் அடிப்படையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு இருந்தால், எமது ஜனநாயக உரிமையை பயன்படுத்தி நாம் விரும்பிய ஆட்சியாளர்களை தெரிவு செய்திருப்போம்.

பொறுப்பு கூறல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் வழங்கப்பட வேண்டும், நடைபெற்றவை மீண்டும் நடைபெறாமல் இருக்க உறுதி வேண்டும், நியாயமான அரசியல் தீர்வு ஏற்பட்டு யுத்தம் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கான அரசியல் உறுதி வழங்கப்பட வேண்டும். இதனை ஐ.நாவில் இலங்கை ஏற்றுக்கொண்டு உள்ளது. அதை நிறைவேற்ற வேண்டும்.

மக்களுடைய காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். தற்போது இடம்பெறும் நல்ல விடயங்கள் துரிதமாக இடம்பெற வேண்டும். தற்போது வடக்கில் இடம்பெறும் விடயங்கள் குறித்து பாராளுமன்றில் ஒத்திவைப்பு பிரேரணைகள் மூலம் பல விடயங்கள் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. பழைய அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பல விடயங்கள் இப்போதும் தொடர்வதை நாங்கள் அறிவோம்.

நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வை நாங்கள் பெறவேண்டுமானால் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்த இடங்களில் தான் வாழ வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இதற்காக ஒருமித்து செயற்பட வேண்டும். எமக்கொரு சந்தர்ப்பம் வந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை அடைவதற்கு பாரிய விலை கொடுத்துள்ளோம்.

எமது மக்கள் பாரிய உயிரிழப்புக்களை எதிர்நோக்கி உள்ளனர். இதனை நழுவவிட முடியாது. இவ்விதமாக நாங்கள் செயற்பட்டால் சர்வதேச சமூகத்தின் மதிப்பை நாங்கள் பெறுவோம். சர்வதேசம் எமக்கொரு நிரந்தர அரசியல் தீர்வு தருவதற்கு முயற்சிக்கின்றது.

அடுத்த மே தினத்தில் நாங்கள் வித்தியாசமான சூழ்நிலையில் மே தினத்தை கொண்டாட முடியும். நாங்கள் புதிதாக ஒன்றையும் கேட்கவில்லை. சர்வதேச நாடுகளில் உள்ள அரசியல் தீர்வையே நாங்கள் கேட்கின்றோம்.

நாட்டினை பிரிக்கவில்லை. சமஷ்டியை தான் கோருகின்றோம். பங்காளி கட்சிகளிடம் நாம் கோருவது அனைவரும் ஒற்றுமையாக நடக்க வேண்டும் என்பதையே என அவர் தெரிவித்தார். (செ-4)

## சி.ஐ.டி என கூறி...

2.30 மணியளவில் மல்லாவி கோட்டைசுட்டிக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சென்ற ஐந்து பேர் கொண்ட ஆயுதக் குழு தாங்கள் இராணுவ புலனாய்வு பிரிவினை சேர்ந்தவர்கள் என்றும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பற்றி விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறி கதவினை திறக்கும்படி அதட்டியுள்ளனர்.

இதனால் அச்சமடைந்த வீட்டின் உரிமையாளர் கதவினை திறந்தபோது கோடரி, கத்தி, பொல்லுகளுடன் வந்த முகமூடி அணிந்திருந்த ஐந்து பேர் வீட்டினுள் புகுந்துள்ளனர்.

வீட்டில் இருந்தவர்களை மிரட்டி முழங்காலில் மண்டியிடும்படி உத்தரவிட்டுள்ளதுடன் வீட்டின் அனைத்து அறைகளையும் சோதனையிட்டுள்ளனர். அவ்வேளை வீட்டினுள் ஒரு அறை பூட்டியிருந்தமையினால் ஆத்திரமடைந்த திருடர் கும்பல் கோடரியால் கதவை கொத்தி தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது அவ்வறையிலிருந்த 12 பவுண் தங்க நகைகள், 8 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையர்கள் திருடியுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது வீட்டு உறுப்பினர் ஒருவர் தொலைபேசியூடாக உறவினரின் உதவியை நாட முற்பட்டவேளை அதை அறிந்த திருடர்கள் அவரை தாக்கி தொலைபேசியையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவத்தினால் அப்பகுதியில் அச்ச நிலைமை தோன்றியுள்ளது. சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸாரிடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸாரினால் கைரேகை நிபுணர்களின் உதவியுடன் தடயங்களை பதிவு செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12-15)

## எனக்கு எதிராக...

மைக்காகவா என்மீது வழக்கு தொடர போகின்றார்களா என்று தெரியவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்கள் போராட்டத்திற்கு உயிர் தருவோம் மக்கள் விரோத ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் அரசுக்கு எதிராக ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரினால் நேற்று கிருலப்பனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,

எவ்வாறான அழுத்தங்கள் என் மீது பிரயோகிக்கப்பட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் என்ற ரீதியில் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் தொடர்ந்து இருப்பேன்.

பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் சுதந்திரக் கட்சியானது முதல் முறையாக பிளவுப்பட்டது.

அந்தவகையில் மீண்டும் இரண்டாவது முறையாக கட்சியானது யானையின் மடியில் அகப்பட்டு பிளவுப்படும் நிலையொன்று தோற்றுவிக்கப்பட்டு வருகின்றது இதற்கு ஒரு போதும் மக்கள் இடமளிக்க கூடாது எனவும் தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் கூட்டத்திற்கு நான் வருகை தருவது தொடர்பில் கடந்த நாட்களில் ஊடகங்களில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வந்ததோடு பல்வேறு தரப்பினர் எனக்கு தொலைபேசி அழைப்பினையும் ஏற்படுத்தி எனது தீர்மானம் தொடர்பில் கேட்டறிந்ததோடு என்னை இந்த கூட்டத்திற்கு கட்டாயமாக செல்லுமாறும் வலியுறுத்தினர்.

அந்தவகையில் நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் என்ற ரீதியிலேயே இந்த கூட்டத்திற்கு வருகை தந்துள்ளேன்.

தற்போதுள்ள ஆட்சி தேசிய அரசாங்கம் என கூறுகின்றார்கள் உண்மையில் இது தேசிய அரசாங்கமா? ஒரு போதும் இல்லை. தனிப்பட்ட தேவைகளுக்காகவும் மக்களின் நலனுக்கு எதிராகவும் ஒன்றிணைந்துள்ள இரண்டு கட்சிகளின் அர்த்தமற்ற செயற்பாடுகளே இது என குறிப்பிட வேண்டும் என மகிந்த தனது உரையில் பேசியுள்ளார். (செ-12)

## முன்பள்ளிகளில்...

வன்னியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் வெளிப்படையாக இருந்த இராணுவ மயமாக்கல் தற்போதைய மைத்திரி நல்லாட்சியில் மிகவும் இரகசியமான முறையில் நன்கு திட்டமிட்ட வகையில் இடம்பெற்று வருகின்றது.

வன்னியில் இராணுவத்திற்காக பொதுமக்களது உறுதிக் காணி அபகரிக்கும் நடவடிக்கை திட்டமிட்ட வகையில் தொடர்கின்றது. மக்களது வசிப்பிடங்களில் காணப்படும் இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் வேலையற்று இருந்த தமிழ் இளைஞர், யுவதிகளை சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவில் வேலைவாய்ப்பு எனக்கூறி இணைத்துக்கொண்ட, இலங்கை இராணுவப் படைப் பிரிவு அவர்களை விவசாயப் பண்ணைகள், பாலர் பாடசாலைகள் எனப் பல்வேறுபட்ட நிறுவனங்களில் இராணுவத் தலைமையின் கீழ் இராணுவக் கண்காணிப்பு, மேற்பார்வையின் அடிப்படையில் பணிக்கமர்த்தியுள்ளார்கள்.

இதில் சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவு முன்பள்ளி ஆசிரியைகள் கற்பிக்கும் முன்பள்ளிகளை இராணுவம் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதுடன் அங்கு எப்படியான செயற்பாடுகள் இடம்பெறவேண்டும் என்பதையும் திட்டமிட்டு வகுத்து வழங்கி வருகிறது.

அங்கு கற்கும் முன்பள்ளிச் சிறுவர்களுக்கான சீருடைகளையும் தமது இராணுவச் சின்னம் பொறிக்கப்பட்ட சீருடைகளாக தற்போது மாற்றி வழங்கியுள்ளார்கள்.

மேலும் இராணு வத்தினது சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவு (சி.எஸ்.டி) முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்கள் இராணுவத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இராணுவச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ள சீருடைகளைத் தான் அணிய வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சீருடைக்கான பணமாக 600 ரூபாயினை முன்பள்ளி மாணவர்களது பெற்றோர் செலுத்தி (சி.எஸ்.டி) இராணுவச் சீருடையை பெற்று மாணவச் சிறார்களுக்கு அணிவித்து முன்பள்ளிகளுக்கு அனுப்புமாறு சிவில் பாதுகாப்புப் படையணியைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியைகள் வற்புறுத்தி வருவதாகப் பெற்றோரால் கூறப்படுகின்றது.

தமது சிறுவர்களை முன்பள்ளிகளில் கல்வி கற்கத்தான் அனுப்பியதாகவும் சிறுவர்களை இராணுவப் படைப் பிரிவில் இணைப்பதற்கு அனுப்பவில்லை எனவும் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயத்தில் முன்பள்ளிகளை மாகாணக் கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவேன் என நீண்ட காலமாகக் கூறிவரும் கல்வி அமைச்சர் த.குருகுலராசா இது தொடர்பில் விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து முன்பள்ளிச் சிறார்களை இராணுவப் படைப்பிரிவில் இணைப்பதிலிருந்து காப்பாற்றுமாறு பெற்றோர்களால் கோரப்படுகின்றது. (செ-4-281)

# மகிந்த குடும்பத்தை கேலி செய்த ஐ.தே.கவின் மே தின ஊர்வலம்!





(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த மே தினக் கூட்டம் நடைபெற்றது.

இந்த மே தினக் கூட்டத்தில், பாரம்பரிய தேன் எடுத்தல், வேட்டையாடுதல், மீன்பிடி தொழில்களில் ஈடுபட்டுவரும் தமிழ் பழங்குடியினர் முதல் முறையாக கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கேலி செய்யும் முகமூடியுடன் ஆதரவாளர்களும், மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தை சிறையில் அடைப்பதைப் போன்ற காட்சிகளைக் கொண்ட ஊர்திகளும் காணப்பட்டன.

இலங்கையின் சகல பகுதிகளில் இருந்தும் வாகனங்களில் வருகை தந்த ஆதரவாளர்கள், பொரளை கெம்பல் மைதானத்தில் ஒன்றுகூடினர். பெருமளவு பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதேவேளை, முன்னாள் காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவு தினம் கொழும்பு புதுக்கடையில் அமைந்துள்ள பிரேமதாஸவின் சிலைக்கு அருகில் நடைபெற்றது. (செ-12)

# வடக்கு பிரேரணை பற்றி பேசாது அதற்கான காரணத்தை தேடுங்கள் -ஜனாதிபதி

சேவையாளர்களாக நாட்டுக்கும் மக்களுக்கும் தெளிவான எதிர்காலத்தை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படவுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

காலி சமனல விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற மேதின நிகழ்வின் போதே அவர இவ்வாறு கூறியுள்ளார்.

நாடு தற்போது பொருளாதார ரீதியில் பின்நோக்கியுள்ளதாக குறிப்பிட்ட அவர், இவ்வாறான சிக்கலான மற்றும் நெருக்கடியான சூழலில் முன்னோக்கி செல்ல அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள அரசியல் தீர்வுத்திட்ட யோசனை குறித்து பிரச்சினைகளை எழுப்புவதை விட அவ்வாறான யோசனை வரக் காரணம் என்ன என்ற கேள்விக்கு, பதிலைத் தேட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டை நேசிப்பவர்களாக பொருளாதார, அரசியல், ஜனநாயக ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்ப தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு, நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி இதன்போது அழைப்பு விடுத்துள்ளார். (செ-12)

## த.தே.கூ. மே...

உறுப்பினர்களும் சொற்ப அளவில் அதுவும் தமிழரசு கட்சி சார்ந்தோரே கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட போதிலும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரியவருகின்றது. இதன் காரணமாகவே சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வதனை தவிர்த்திருந்ததாக தெரியவருகின்றது.

மேதின அழைப்பு துண்டுப்பிரசுரத்திலும் வடக்கு அவைத்தலைவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், முதலமைச்சரது பெயர் குறிப்பிடப்படவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் புறக்கணிக்கப்பட்டு உள்ளதாக அறிய முடிகின்றது. இதேவேளை நேற்றைய தினம் உரையாற்றிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்,

வழமைக்கு மாறாக கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் ஒற்றுமையை பற்றி தனது உரையில் அடிக்கடி வலியுறுத்தி இருந்தார். மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கலந்து கொள்ளாத நிலையில் வடக்கு கல்வி அமைச்சர் குருகுலராஜாவும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளைகூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் சில தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் கல்வி அமைச்சர் குருகுலராஜா ஆகியோர் கிளிநொச்சியில் விவசாய அமைச்சர் ஐங்கரநேசனால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## 5-16 வயது வரை...

பட்டுள்ளது.

5 வயதுக்கும், 16 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பத் தவறும் பெற்றோருக்கு தண்டனை விதிக்கப்படவுள்ளது. அடுத்த இரண்டு மாதங்களில் இது நடைமுறைக்கு வரவுள்ளது.

இதன்படி மாணவர்களின் வருகையை ஒழுங்காக கண்காணிக்கும் பொறிமுறை, பாடசாலைகள் மட்டத்தில் இருந்து வலயக் கல்வி பணியக மட்டம் வரையான பொறிமுறையும் உருவாக்கப்படவுள்ளது.

1997ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம், 5 வயதுக்கும், 4 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் பாடசாலைக்கு கட்டாயம் செல்ல வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


நீங்கள் தொழில் தேடுபவரா?
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் பயிற்சி மற்றும் உடனடி வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்

O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course
Up to 30% Discount
3 - 4 மாதங்களில் உங்களாலும் முடியும்
- கற்கைநெறி சான்றிதழுடன் பகுதிநேர / முழு நேர தொழில் ஏற்பாடு.
- தனிமனித ஆளுமை மற்றும் ஆங்கில பேச்சுத்திறன் விருத்தி.
- வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

Scholarships Available
கற்கைநெறி ஆரம்பம் 09th May 2016
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
முழு விபரங்களுக்கு www.sikaram.lk
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(C-4497)


## 15 வீத வற்வரி அதிகரிப்பு...

அறவிடப்பட்டு வந்த 11 சதவீதமான பெறுமதி சேர் வரி இன்று தொடக்கம் 15 சதவீதமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இதுவரை பெறுமதி சேர் வரிக்கு உள்ளடக்கப்படாத மின்சார கட்டணத்திற்கு எதிர்வரும் காலத்திலும் இவ்வரி உள்ளடக்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தேசத்தை கட்டியெழுப்புதலுக்கான வரியில் மின் கட்டணம் இன்று தொடக்கம் உட்படுத்தப்படவுள்ளது.

அத்தோடு இது வரைக்காலமும் வற்வரி விலக்களிக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்கள், தொடர்பாடல் சாதனம் அல்லது இயந்திரங்கள், உயர் தொழில்நுட்ப சாதனங்கள் சார் தொடர்பாடல் துறைக்கும் சுகாதர சேவை, நீர்க்கட்டணம் மற்றும் தொலைத்தொடர்பு கட்டணம் ஆகியவற்றிற்கும் குறித்த வற்வரி அதிகரிப்பு தாக்கம் செலுத்தும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மருந்து பொருட்களுக்கு வற்வரி அறிவீடு மேற்கொள்ளப்படாத நிலையில் தனியார் துறை சுகாதார சேவைக்கு வற்வரி சீர்த்திருத்தம் தாக்கம் செலுத்தும் என நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வற்வரி அதிகரிப்பானது எவ்வகையிலும் சாதாரண பொது மக்களுக்கு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

நல்லாட்சி அரசாங்கத்தின் வேலைத் திட்டமானது பொது மக்களுக்கு சலுகைகளை வழங்கும் நோக்கத்தை கொண்டதாகவே அமைந்துள்ளது.

எனினும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் நிலை மற்றும் இலங்கை தற்போது முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி என்பவற்றை கருத்தில் கொண்டே இந்த வற்வரி சீர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் சாதாரண மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த செயற்பாட்டுக்கும் அரசாங்கம் அனுமதி வழங்காது என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இன்றைய தினம்...

உலகத்தொழிலாளர் தினம் இம்முறை மே மாதம் முதலாம் திகதியான ஞாயிற்றுகிழமை நினைவு கூரப்படும் நிலையில் இன்றைய தினம் விடுமுறை வழங்கப்படுமா இல்லையா என தொழிலாளர்களிடையே குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையிலே அமைச்சர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைகளை வர்த்தகர்கள் விடுமுறை தினமாக கடைபிடித்து வருகின்ற நிலையில் இம்முறை தொழிலாளர் தினம் ஞாயிற்றுக்கிழமையில் வந்திருந்தமையால் தமது விடுமுறை தினத்தை இன்று (திங்கட்கிழமை) வழங்க வேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அக்கோரிக்கையானது நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்றைய தினம் அரச வங்கிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## யாழில் 4 மேதின நிகழ்வுகள்...

இதேபோல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதின கூட்டம் பருத்தித்துறையிலும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் மேதின கூட்டம் புத்தூரிலும் இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்திய மேதின கூட்டம் யாழ்.பலகலையிலும் நடைபெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதின கூட்டம் முன்னதாக இணுவில் கந்தசாமி கோவில் முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் கே.கே.எஸ். வீதி வழியாக இராமநாதன் கல்லூரியில் நிறைவுற்று அங்கு மேதின கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், கட்சியின் பொதுசெயலாளர் மாவை.சேனாதிராஜா, ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் மற்றும் அமைச்சர்கள் உறுப்பினர்கள் பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்ததோடு, பெருமளவில் பொது மக்களும் கலந்து கொணடிருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இணைந்து கூட்டாக நடத்திய தொழிலாளர் தின நிகழ்வு பருத்தித்துறையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை சிவன்கோவில் திருமண மண்டபத்தில் மாலை 3 மணிக்கு மேதின நிகழ்வுகள் நடைபெற்றன.


கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சியின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கமும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்து நடத்திய மேதின நிகழ்வு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. முன்னதாக முற்பகல் வேளையில் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகிய மேதின பேரணி குமாரசாமி வீதியூடாக பலாலி வீதியை அடைந்து பரமேஸ்வரா சந்தியை அடைந்து மீண்டும் பல்கலைக் கழகத்தை அடைந்தது.

இம் மூன்று கட்சிகளும் மற்றும் சங்கங்களின் மேதின பிரகடனத்தில் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனோரை கண்டறிதல் ஆகியவற்றை வலியுறுத்தியும், தமிழ்த் தொழிலாளர்கள், தமிழ் விவசாயிகள், தமிழ் மீனவர்கள் ஒடுக்குமுறையிலிருந்து விடுபடல், காணி அபகரிப்பை தடுத்தல், மீள்குடியேற்றத்தை வலியுறுத்துதல், இராணுவமயமாக்கலை தடுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகளை நிறுத்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தல், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் என்பன முக்கிய விடயங்களாக வலியுறுத்தப்பட்டுள்ளன. (செ-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## நீத்தார் பெருமை



### ஐ.குலவீரசிங்கம்

காரைநகர் வாசரும், மலேசியா கோலாலம்பூர் வாழ்வருமாகிய ஐ.குலவீரசிங்கம் அவர்களின் மறைவு சைவத் தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும். ஈழத்துச் சிதம்பரத்தான் திருவடி மறவாச்சிந்தையாளர். மாணிக்க வாசகர் மடாலயத்தின் செயற்பாடுகளின் மீது நம்பிக்கை கொண்டவர். அபிஷேகப் பிரியனான ஆடலிறைக்கு ஐந்தையும் வழங்கும் பசு வளர்ப்பிற்கு பேருதவி புரிந்தவர்.

கோலாலம்பூரில் சைவ சித்தாந்த மன்றத்தைத் தாபித்து தமிழ் கூறும் நல்லுலகெங்குமிருந்து பேரறிஞர்களை அழைத்து சொற்பொழிவுகளையும், சைவசித்தாந்த வகுப்புக்களையும் நடத்தியவர். கிடைத்தற்கரிய சைவத்தமிழ் நூல்களை அச்சேற்றி உதவிய பெருந்தகை. நாவலர் பெருமான் எழுதத் தொடங்கி முடிக்காது விட்டிருந்த பெரிய புராணச் சூசனத்தை ஏழாலைப் பண்டிதர் மு.கந்தையாவைக் கொண்டு எழுவித்து வெளியிட்ட அருந்தவர். அருள்நெறித் திருக்கூட்டத்தினுடாக ஒவ்வொரு திருவெம்பாவைக் காலந்தோறும் "திருவாதவூரடிகள் புராணம்" ஓதும் பெரு பணியை முன்நின்று நடாத்தியவர்.

இவ்வாறு தமிழுக்கும், சைவத்திற்கும் அரும்பணியாற்றிய பெரியாரின் மறைவால் துயருற்றிருக்கும் சைவ அபிமானிகளதும் குடும்பத்தாரினதும் துயரில் பங்குகொள்வதோடு அமரரின் ஆன்மா தில்லைக் கூத்தன் திருவடியில் பெருஞ்சாந்தி காணப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(C-4495)

மாணிக்கவாசகர் மடாலயம் அன்னதான சபை
ஈழத்துச் சிதம்பரம், திண்ணபுரம் சிவன்கோவில் காரைநகர்


வீட்டின் ஒருபகுதி வாடகைக்கு
நல்லூர் சூழலில் அமைந்துள்ள வீட்டின் ஒருபகுதி வாடகைக்கு உண்டு. ஓரிருவர் கொண்ட குடும்பத்தினர் விரும்பத்தக்கது.
(C4492)
தொடர்புக்கு : 0772935509







## கண்ணீர் அஞ்சலி

திருமதி செல்வராசா புவனேஸ்வரி
(சின்னக்கிளி)



எமது நிறுவனத்தில் பணிபுரியும் செ. செல்வக்குமார் அவர்களின் அன்புத்தாயார் திருமதி செல்வராசா புவனேஸ்வரி (சின்னக்கிளி) அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயரடைகிறோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய கூத்தபிரானின் திருவடியை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி!

– வலம்புரிக் குடும்பம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.